# பாழ் நகரத்தின் பொழுது

**ஆசிரியரின் பிற நூல்கள்**

*பதுங்குகுழியில் பிறந்த குழந்தை* (2008)
*ஆட்களற்ற நகரத்தை தின்ற மிருகம்* (2009)



# பாழ் நகரத்தின் பொழுது

## தீபச்செல்வன் (1983)

ஈழத்தின் வடக்கில் வன்னியில் கிளிநொச்சி நகரத்திலுள்ள இரத்தினபுரத்தைச் சேர்ந்தவர் தீபச்செல்வன்.
இயற்பெயர் பாலேந்திரன் பிரதீபன்.
ஈழத்தில் நடைபெற்ற நான்காம் கட்ட போர் பற்றி பிரக்ஞைபூர்வமாக எழுதியிருக்கிறார். கவிதைகளுடன் விமர்சனங்களையும் எழுதிவரும் இவர் ஈழப் போரின் அவல வரலாற்றை 'போரும் வாழ்வும்' என்ற தொடராக எழுதியிருக்கிறார். நேர்காணல், புகைப்படம், வீடியோ விவரணம் முதலிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்.

தீபம் (http://deebam.blogspot.com) வலைப்பதிவில் ஈழ அரசியலின் சமகால நிலவரங்களைத் தொடர்ந்து எழுதிவருகிறார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பட்டப் படிப்பை நிறைவு செய்திருக்கிறார். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகப் பிரிவில் வருகை விரிவுரையாளராகப் பணிபுரிகிறார்.

மின்முகவரி : deebachelvan@gmail.com

தொலைபேசி : 00 94 772 487 257

**தீபச்செல்வன்**

# பாழ் நகரத்தின் பொழுது

காலச்சுவடு பதிப்பகம்

**பாழ் நகரத்தின் பொழுது** ✧ கவிதைகள் ✧ ஆசிரியர்: தீபச்செல்வன் ✧ © தீபச்செல்வன் ✧ முதல் பதிப்பு: ஜூலை 2010 ✧ வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001 ✧ தொலைபேசி: 91 – 4652 – 278525 ✧ தொலைநகல்: 91 – 4652 – 402888 ✧ மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in ✧ அச்சுக்கோப்பு: சுதர்சன் புக் புராசசர்ஸ் அண்ட் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் ✧ அட்டை அச்சாக்கம்: பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 ✧ அச்சாக்கம்: மணி ஆஃப்செட், சென்னை 600 005.

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 339

**PaaL naharathin pozhuthu** ✧ Poems ✧ Author: thEpacelvan ✧ © Deepaselvan ✧ Language: Tamil ✧ First Edition: July 2010 ✧ Size: Demy 1x8 ✧ Paper: 18.6 kg maplitho ✧Pages: 96 ✧ Copies: 550 + 50 ✧ Published by Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India ✧ Phone: 91 - 4652 - 278525 ✧ Fax: 91 - 4652 - 402888 ✧ e-mail: kalachuvadu@sancharnet.in ✧ Typesetting: Sudarsan Book Processors and Distributors ✧ Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 ✧ Printed at Mani Offset, Chennai 600 005.

ISBN: 978 - 81 - 89359 - 79 - 9

07/2010/S.No. 339, kcp 542, 18.6 (1) 600

பாழ் நகரத்தில் என்னுடன் இருந்த
விமலேஷ் காந்தீபனுக்கும்
இதே காலத்தில் உயிரின் தோழமையாயிருந்த
நவராஜிற்கும்
அன்பில் மிகுந்திருந்த மாதுமைக்கும்

## நன்றி

தீபம், அம்ருதா, எதுவரை,
நடுகை, தீராநதி, இருக்கிறம், கீற்று, வார்ப்பு, வீரகேசரி,
திண்ணை, வடக்குவாசல், யுகமாயினி,
உயிர்நிழல், நடுகை, ஈழநாதம்.

# பொருளடக்கம்

**முன்னுரை**

*உருச்சிதைந்திருந்த காலத்தின் கவிதைகள்* 11

**என்னுரை**

*பாழடைந்த நகரத்தில் எனக்காய்க் காத்திருந்த பலி* 17

விரட்டப்படுகிற தெருவில் அறுகிற செருப்பு 21

முத்தமிடக் காத்திருந்த நாள் 22

பாழ் நகரத்தின் பொழுது 24

திருவிழாவில் மண்சுவரில் மோதுண்ட குழந்தை 26

பயமுறுத்துகிற இருள் 28

விடுபடுதலின் பலி 30

கறுப்புத் துணி மூடுகிற நகரம் 32

ஜெபங்களின் மீதெழுகிற அழுகை 35

எலும்புக்கூடுகள் நிறைக்கப்பட்ட வகுப்பறை 36

பூனையும் நாயும் நிரம்பிய வீடு 38

மாடு சூரியனை மேய்ந்து விட்டுப்போகிறது 39

இந்த நாகரிகத்தின் வேர் படுகிறது 40

கடைசி உணவு நாட்கள் 44

பாட்டியின் கதையும் குழந்தைகளின் உலகமும் 46

கடலில் கரைந்த ஒரு துண்டு படகு 48

அடருகிற இரவொன்றில் தின்னப்பட்ட கடல் 50

பதுங்குகுழியைவிட்டு அலைகிற வெளி 52

வெளிக்குநகரும் மரங்கள் 54

என்னைத் தொடருகிற மேலுமொரு இரவு 56

திருப்பாற்கடலில் மூழ்கிய ஆழ்வார் 58

காலம் கனத்திருக்கிற சொற்கள் 60

அடிமைகள் நகரத்தின் தீபாவளி 63

சில சொற்கள் குரல்கள் மற்றும் முகங்கள் 64

சொற்கள் பற்றி எரிந்துருகிய முகம் 67

மிதந்து திரியும் திறப்புகள் 68

திரும்ப முடியாத நகரம் 70

ஆட்களை இழந்த வெளி 72

புகைப்படங்களுக்கான எதிரியின் கருணை 74

பந்துகள் கொட்டுகிற காணி 76

குழந்தைகள் தோற்கடிக்கப்படுகிற சமாதானத்தின் நிழல் 78

கைது செய்யப்பட்ட தாயின் சரணடைந்த குழந்தை 81

ஏ-9 வீதி 2009 82

இல்லாதவர்களின் அளவற்ற கனவு 84

இருள் சூழ்ந்த கிழக்கு 86

சொற்கள் சிதைகிற மணல் 88

முட்கம்பிகளில் படிகிற அடையாள இலக்கம் 90

அபிராஜின் தங்கை லூர்த்தம்மாவின் கண்கள் 92

சொற்களற்றலைகிற நகரம் 94

வருடத்தைத் தொடருகிற போரின் பிரகடனம் 95

சவம் நிரம்பிய புத்தகப் பைகள் 96

# உருச்சிதைந்திருந்த காலத்தின் கவிதைகள்

யாழ்ப்பாணம் மூடுண்டு போயிருந்த காலத்தில் ஒரு மாலைப்பொழுதில்தான் நான் தீபச்செல்வனைச் சந்தித்தேன். அதற்கு முன் அவரின் கவிதை ஒன்றைத் ‘திண்ணை’ இணையதளத்தில் படித்திருந்தேன். யாழ்ப்பாணம் பற்றிய *யாழ் நகரம்* என்ற கவிதை அது. வாசல்கள் யாவும் அடைக்கப்பட்டு மரணத்தின் மொச்சை எப்பொழுதும் கவிந்திருந்த அந்த நாட்களில் தீபச்செல்வனின் *யாழ் நகரம்* கவிதை, யாழ்ப்பாணத்தை அதன் அன்றைய இயல்புகளோடு காட்டியிருந்தது. அதன் பின்னர் நான் அவருடன் பல விடயங்கள் பற்றியும் உரையாடியிருக்கின்றேன். மனிதர்களை வேட்டையாடும் காலத்தின் பயங்கரங்கள் எங்களை எப்போதும் துரத்திக் கொண்டேயிருந்தன. அச்சத்தைத் தரும் அந்த நாட்கள் மிகவும் கொடியவை. உண்மையில், ஒவ்வொரு மனிதனும் தன்னை யாராவது கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற அச்சத்துடனேயே உலா வந்துகொண்டிருந்தான். தடுப்புச் சுவர்களாலும் சோதனைச் சாவடிகளாலும் நிரம்பப் பெற்றிருந்தது அன்றைய யாழ்ப்பாணம்.

நான் பல தடவைகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விடுதி வாயிலில் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்திருக்கின்றேன். பெரும்பாலும் துயரம் படிந்த முகத்துடன், சில சமயங்களில் மகிழ்ச்சியுடனும், என்னைச் சந்திக்க வருவார். அப்போதெல்லாம் ஒருவிதமான பதட்ட மனநிலை அவரிடம் குடிகொண்டிருந்தது. சமகாலம்

தரும் அச்சமும் எதனையும் வெளிப்படுத்த முடியாத பெருந் துயரும் எங்களை வாட்டிக்கொண்டேயிருந்தன. தீபச் செல்வனின் 'தீபம்' வலைப்பதிவு மூடுண்ட யாழ்ப்பாணத்தின் அன்றைய நிலையை வெகுவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. உணவுப் பொருட்களுக்காக மக்கள் அலைந்ததை, இனந் தெரியாத ஆயுததாரிகளால் நிகழ்த்தப்பட்ட எண்ணற்றக் கொலைகளை, இராணுவ நெருக்கீடுகளை, கைதுகளை, காணாமற்போதல்களை எனப் பலவற்றையும் அவரின் கவிதைகளில் காண முடியும்.

இராணுவ வாகனங்கள் செல்வதற்காக வீதிகள் பூட்டப்படும் பொழுதுகளில் சனங்கள் வீதிகளில் கொதிக்கும் வெயிலிலும் காத்துக்கொண்டிருந்தார்கள். நகரங்கள் இரவை அண்மிக்கும் முன்பே மூடிக்கொண்டன. வீதிகள் வெறிச்சோடிப்போயின. மக்கள் வீதிகளையும் பொழுதுகளையும் இராணுவத்தினருக்குக் கொடுத்துவிட்டு வீடுகளுக்குள் முடங்கிப்போயினர். காண்டா வனம்போல் தகித்திருந்த காலமது. யார்மீதும் குற்றம் சுமத்த முடியாமலும் யாரிடமும் கேள்விகளைக் கேட்கவும் முடியாத அச்சுறுத்தல் மிக்க காலமாக அந்த நாட்கள் இருந்தன. நாங்கள் பின்னரெல்லாம் எங்கள் சந்திப்புக்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

பாழ் நகரத்தின் பொழுது தீபச்செல்வனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் பெரும் பான்மையானவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை. யாழ்ப் பாணம் எப்போதும் அச்சப் பிராந்தியமாகவே இருந்துவந்திருக் கின்றது. அதன் பிரதான வாயிலான ஏ–9 வீதி நிரந்தரமற்ற கனவின் இழையில் தொங்கிக்கொண்டேயிருக்கின்றது. சமா தான காலத்தில் சொர்க்கத்தின் வாயிலாக இருந்த இந்த வழி, யுத்தப் பிரகடனத்திற்காக மூடப்பட்டபோது மரணத்தின் இரும்புத் திரையானது. யுத்தம் மீண்டும் ஆரம்பித்தபோது யாழ்ப்பாணத்திற்கான உணவு விநியோகம் உட்படப் பலவும் பாதிக்கப்பட்டிருந்தன. முற்றிலும் இராணுவமயமான அன்றைய யாழ்ப்பாணத்தில் எப்போதும் மரணத்தின் நிழல் அலைந்து கொண்டேயிருந்தது.

வாழ்வு, எப்போதும் கனவுகளையும் நம்பிக்கைகளையும் பெருக்கிக்கொண்டேயிருக்கின்றது. வாழ்க்கைக்கான விருப்பும் நாட்டமும் இவற்றினால்தான் கட்டியமைக்கப்படுகின்றன. நம்பிக்கைகளுக்குப் பதிலாக நம்பிக்கையீனம் மேலெழுகின்ற போது மிதமிஞ்சியதான வெறுப்புணர்வு இயல்பாகவே வந்து விடுகின்றது. இந்த வெறுப்புணர்வைப் படைப்பு மனநிலை இலகுவில் உட்கொள்கின்றது. தீபச்செல்வனின் கவிதைகள்

நம்பிக்கையீனங்களையும் அவற்றினால் விளையும் ஏமாற்றங்
களையும் சூட்சுமமாக வெளிப்படுத்துகின்றன. அதேவேளை
துயரங்களிலிருந்து அகலாத அவரின் மனம் அவற்றையே எப்
போதும் காவிக்கொண்டு அலைகின்றது. இதனால்தான், இந்தக்
கவிதைகளில் வெற்றுக் கூச்சல்களோ களியாட்ட மனவுந்து
தலோ இல்லாமற்போய் சாவுகளின் துயரம் படிந்துவிடுகின்றது.
சக மனிதனிலும் தன் துயரத்தையே காணும் கவிமனம்
பொதுமைத் துயரைத் தனக்கானதாகக் கொள்ளுகின்றது.

வாழ்ந்துகொண்டிருக்கும் நகரம் தரும் வலியை எழுதும்
அவர், தான் வாழ்ந்த கிளிநொச்சி நகரம் பற்றிய பிரிவுணர்
வையும் அது யுத்தத்தின் சந்நதத்தில் அழிந்துகொண்டிருந்த
தையும் எழுதிச்செல்லுகின்றார். தினந்தினம் மனிதர்கள் காவு
கொள்ளப்படுவதையும் நிலங்களும் உடைமைகளும் இழக்கப்
படுவதையும் எழுதுகின்றார். *திரும்ப முடியாத நகரம்*, *பதுங்கு
குழியை விட்டு அலைகிற வெளி* போன்ற கவிதைகள் இத்தகை
யவை. இத்தொகுப்பில் வரும் இரண்டு நகரங்களுமே ஒரே
நூலில் பிணைக்கப்பட்ட இரண்டு பட்டங்கள் போன்றவை. இதன்
நூலான ஏ–9 நெடுஞ்சாலை மூடப்பட்டபோது இந்த இரண்டு
பட்டங்களும் அறுந்து எங்கெங்கோ காற்றில் அலைக்களிக்கப்
பட்டுக் கிழிந்துபோயின. முழுமையும் ரணமும் நிணமுமான
அநுபவங்கள்தான் இறுதியில் எஞ்சின. வன்முறையின் உச்ச
மான நிகழ்வுகளையும் வடுக்களையும் இந்த நகரங்கள் சந்தித்
திருக்கின்றன.

உள்ளடங்கிப் பின் உருக்கொள்ளும் துயரத்தின் மொத்தத்
திரட்சியாகத் தீபச்செல்வனின் இத்தொகுப்புக் கவிதைகள்
உள்ளன. உண்மையில் அவர், அகநிலை மனத்துக்கும் புறநிலை
யான இருப்புக்குமிடையில் தத்தளித்துக்கொண்டேயிருக்கின்
றார். இத்தத்தளிப்பினால்தான் அவரின் கவிதைகள் முற்றுப்
பொறாத வெளியில் அந்தரித்தபடியிருக்கின்றன. காட்சிப் படிம
மாக விரியும் அநேக கவிதைகளும் இருத்தலுக்கான, தன் அங்கீ
காரத்துக்கான சாதாரண மனிதனின் கொந்தளிக்கும் குரலாய்
ஒலிக்கின்றன. இது தீபச்செல்வனுக்கு மட்டும் நிகழ்வதல்ல;
பொதுவான ஈழக் கவிதைகளின் மையமே இதுவாகத்தானிருக்
கின்றது. யுத்தம் தனிமனிதனின் மீதும் சமூகத்தின் மீதும் தன்
தீராத வெறித்தனத்தை நிகழ்த்தியபடியேயிருந்தது. ஒவ்வொரு
தனிமனிதனும் அச்சத்தின் கொடுநிழலின் கீழ்தான் உறங்க
வேண்டியிருந்தது. இதனைத் தீபச்செல்வன் தன் கவிதைகளில்
வெளிப்படுத்தியிருக்கின்றார். பொழுதுகள் பயத்துடன் கழிவதை
யும் துப்பாக்கிகளால் கண்காணிக்கப்படுவதையும் தன்னுணர்
வின் மொழியில்,

நாய்கள் இன்னும் குரைத்தபடியிருக்கின்றன
சலனமற்ற இரவில்
எல்லோரும் கொள்ளுகிற மரண தூக்கத்தில் கனவு
என்னைத் தின்று முடிக்கிறது.

*(விரட்டப்படுகிற தெருவில் அறுகிற செருப்பு)*

தொலைபேசி எங்கும்
துவக்குப் புகுந்து
அலறிக்கொண்டிருக்கிற இராத்திரியில்
எங்கும் செல்ல இயலாது
தோற்றுப்போன சொற்கள்
கட்டிலின் கீழாய்க் கிடந்து
முதுகைக் குத்திக் கொண்டிருக்கின்றன.

*(பாழ் நகரத்தின் பொழுது)*

என எழுதுகின்றார்.

கவிதை என்பதற்கான மனப்பதிவுச் சட்டங்கள் அல்லது விமர்சன அளவுகோல்களுக்கு அப்பால் உணர்வின் பெருக்காயும் வடிகாலாயும் இத்தொகுப்பின் கவிதைகள் உள்ளன. கவிதை, தன் எல்லையைக் கடந்த பாய்ச்சலை அல்லது விரிவை இங்கு பெறுகின்றது. மொழியின் இயல்பும் பரிமாணமும் மாறுகின் றன. காட்சிப் புலம் நோக்கிக் கவிதைகள் விரிகையில் அதீத சொற்சேர்க்கைத்தனம் கூடிவருகின்றது. இது கவிதை வாசிப்பை விவரணச்சித்திரிப்பாக மாற்றிவிடுவதோடு, அர்த்தச் சிதைவுக்கும் காரணமாகிவிடுகின்றது. இந்தச் சிதைவை தீபச் செல்வனின் பல கவிதைகளிலும் காணமுடிகின்றது. இது சித றுண்ட மனத்தின் இயைபற்ற தன்மையால் நிகழ்வதாக இருக்க லாம். எனினும், கவித்துவம் கூடிவரும் இடங்களையும் மிகவும் சாதாரணமாகவும் மலினமாகவும் நீர்த்துப்போகச் செய்யும் ஆபத்தும் ஏற்பட்டுவிடுகின்றது. இது அவரின் கவிதைகளின் பலவீனமாகவுள்ளது.

ஈழக் கவிதைகள் அதிகமும் தனிமனித மனத்தின் உள்ளார்ந்த மாறுதல்களையே சித்திரிக்கின்றன என்னும் பொதுப்பார்வை பலரிடம் காணப்படுகின்றது. இதை ஒற்றைப் பரிமாணத் தன்மை எனக் கூறுகட்டுவோரும் இருக்கின்றார்கள். இதனை இவ்வாறு சுட்டுவது எந்த விதத்தில் பொருத்தமுடைய தாக இருக்கும் என்பது அவதானிக்கத்தக்கது. ஏனெனில், ஈழக் கவிஞர்கள் பலரும் யுத்தத்தை புற வாயிலூடாகத் தரிசிப்பதை விடவும் அகத்தரிசனமாகவே கண்டிருக்கின்றார்கள். ஆதலால், கவிதைகளும் அகநிலை அனுபவங்களின் திரட்சியாக அமை வது தவிர்க்கமுடியாததாக அமைவதாகவே நினைக்கின்றேன்.

இதே வேளை இந்தக் கூறுகட்டல் முற்றுமுழுதாக நிராகரிக்கத் தக்கதுமல்ல.

தீபச்செல்வனின் கவிதைகளை வாசிக்கும்போது வெறுமனே கவிதைகள் என்பதற்கப்பாலும் ஒரு வரலாற்றுப் பதிவை கண்டறியும் அனுபவமும் ஏற்படுகின்றது. ஈழத்தில் போர் மிக உச்சம் பெற்றிருந்த காலத்தில் எழுதப்பட்ட இவரின் கவிதைகளில் போரினால் உருக்குலைந்துபோன இளம்தலைமுறை ஒன்றினது யுத்தகால அனுபவத்தினையும் வலியையும் கண்டு கொள்ள முடிகின்றது. தீபச்செல்வன் பிறந்த காலத்திலிருந்தே ஈழத்தில் யுத்தம் நடைபெற்று வந்திருக்கின்றது. ஆதலினால், யுத்தத்தின் கோரத்தின்மீதான வெறுப்பும் விடுதலையின் மீதான பேரவாவும் இயல்பாகவே கவிதைகளில் பிரதிபலிக்கின்றன. தீபச்செல்வன் தான் வாழ்ந்த காலத்தின் சாட்சியமாகத் தன் கவிதைகளைத் தந்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் **சித்தாந்தன்**
***12.05.2010***

**என்னுரை**

# பாழடைந்த நகரத்தில் எனக்காய்க் காத்திருந்த பலி

*வன்னியில் அம்மாவும் தங்கையும் பயங்கரமான ஆயுதங்களால் அச்சுறுத்தப்படும் போர்ச் சூழலில் வாழ்ந்துகொண்டிருந்தபொழுது நான் துப்பாக்கிகளால் எப்பொழுதும் அச்சுறுத்தப்பட்ட அபாயகரமான இராணுவ மயமான நகரத்தின் சூழலில் தள்ளப்பட்டேன். எனக்கு முன்னால், எனக்கு அருகாக எனது நண்பர்கள். எனது சனங்கள் துப்பாக்கியால் அழிக்கப்படும் இரத்தம் படிந்த சூழலில் எனது வாழ்க்கை தொடர்ந்துகொண்டிருந்தது. எனது ஞாபகமாய் எனது அடியாய் எனது மனத்துயர் களாய் இந்தக் கவிதைகளைத்தான் அப்பொழுது எழுதிக் கொண்டிருந்தேன்.*

*இராணுவ மயமான நகரம் ஒன்றில் அல்லது பிரதேசம் ஒன்றில் மனிதர்கள் அழித்து ஒழிக்கப்பட்டு, அவர்களின் கனவு எச்சரிக்கப்பட்டு, எதுவும் செய்ய இயலாதவர்களாக்கும் பயங்கரம் நிகழ்த்தப்பட்டது. தெருத்தெருவாக இரத்தத்துடன், காயங்களுடன் கிடந்தவர்கள் பலர். இனங்காண முடியாதவர்களாய்ச் சிதைவடைந்து கிடந்தார்கள். உயிருக்கு எந்த மதிப்பும் இல்லாமல், மனிதாபிமானத்துக்கு எந்த இடமும் இல்லா மல் அந்நியமும் பயங்கரமும் வன்மமும் நிறைந்த நகரத் தில் நான் வாழ்ந்தபொழுது இந்தக் கவிதைகளை எழுத நேர்ந்தது.*

புராதனம், பூர்வீகம், அடையாளம், நிறம் எல்லாவற்றின் மீதும் அதிகாரம் நின்று எச்சரித்துக்கொண்டிருந்தது. தமிழர் களின் மிகப் பழமையான யாழ் நகரம் எதிர்கொண்ட மரணப் பொறி நிறைந்த அவலம், நெருக்கடி அதன் இருப்புமீது மிகப் பெரியளவில் பாதித்துக்கொண்டிருந்தது.

என்னை இறுதியாக எச்சரிக்கும் பட்டியல் ஒன்றின் மூலமாக மரணத்திற்கு தெரிவு செய்திருப்பதாக இராணுவம் அறிவித்தது. என்னுடன் பதினான்கு பேர் அறிவிக்கப்பட்டார்கள். பலர் அதிர்ச்சியால் எங்கெங்கோ ஓடினார்கள். மூடுண்ட யாழ் நகரத்திலிருந்து வெளியேறுவதற்கு எந்த வழிகளும் இல்லாமல் நானிருந்தேன். எத்தருணத்திலும் கொல்லப்படலாம் என்று யாழ் நகரத்தில் வாழ்ந்த பலரைப்போல சாவு எதிர் வருகிறதா என்ற அச்சத்துடன் நாட்கள் கழிந்தன. நான் மீண்டும் மீண்டும் தொலைபேசி வழியான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட் டேன். சுற்றிவளைப்பில் விசாரிக்கப்பட்டேன். முகாம்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். அசைய முடியாதபடி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவந்தேன்.

எனக்கு முன்னால் எல்லோருடைய சொற்களும் தடை செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. யாரும் யாரையும் நம்ப முடியாத சூழலிலாயிருந்தது. எதிர் வருபவர்கள் எல்லோரும் கைகளை முதுகுப்புறமாக வைத்து, கத்திகளை மறைத்து வைத் திருக்கும் கொலையாளிகளைப் போலவே இருந்தார்கள். ஒரு அறையில் மிகச் சுருங்கிய இடத்தில் எனது வாழ்வு நிகழ்ந்து கொண்டிருந்தது. மிகச் சுருங்கிய தெருக்களில் நான் சென்று வந்துகொண்டிருந்தேன். எனது சனங்களின் வாழ்வு பாழடைந்த யாழ் நகரில் மிகச் சுருங்கிப்போயிருந்தது.

ஊரடங்குச் சட்டம், இனந்தெரியாத நபர்கள், துவக்குகள், குருதி என்று அப்போதைய மக்களின் வாழ்வு நடந்துகொண் டிருந்தது. ஒவ்வொரு மரணத்தின் பிறகும் இந்தக் கவிதைகள் எழுதப்பட்டன. ஒவ்வொரு அச்சுறுத்தலின் பிறகும் இந்தக் கவிதைகள் எழுதப்பட்டன. மரணம் மிகக் கொடுமையாக அச் சுறுத்திக்கொண்டிருந்தபொழுதும் கவிதைகள் எழுதுவதை நான் கைவிடவில்லை. அத்தருணங்களில் மிக ஆறுதல் தருவதாகவும் வலியை இறக்கி வைக்கும் உபாயமாகவும் இந்தக் கவிதைகள் தான் உதவின.

முக்கியமாக யாழ்ப்பாணம் பற்றிய கவிதைகளுடன், போர் உக்கிரமடைந்த இறுதி நாட்களில் எழுதப்பட்ட கவிதைகளும் போரின் பிறகான நிலம் பற்றிய சில கவிதைகளும் இந்தத் தொகுப்பில் உள்ளன. அம்மாவையும் தங்கையையும் இறுதி

யுத்த நிலத்தையும் சுற்றிச் சுற்றி வரும் எனது ஏக்கங்கள் தந்திருந்த தோல்வியையும் துயரத்தையும் வலியையும் எழுதி யிருக்கிறேன். எப்பொழுதும் கொல்லப்படலாம் என்பதால் எழுதும் பிரதிகளை உடனுக்குடன் எனது வலைப்பதிவில் சேகரித்துக்கொண்டிருந்தேன்.

பாழடைந்த நகரத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட என்னுடன் பழகுவது, சேர்ந்து திரிவது எல்லாமே அபாயமான விடயமாகிய பொழுது, நிறையப்பேர் என்னை விட்டு ஒதுங்கிய பொழுது எனக்கு ஆறுதல், அன்பு தந்த நண்பர்கள் சிலர் இருக்கிறார்கள். என்னுடன் அச்சுறுத்தும் நகரத்திற்கு வந்தவர் கள், தங்கள் சைக்கிள்களில் ஏற்றித் திரிந்தவர்கள். பாதுகாக்கும் சுவரைப்போல அவர்கள் என்னைச் சுற்றி நின்றார்கள்.

எப்பொழுதும் எனக்கு அருகில் என்னுடன் இருந்த விமலேஷ், காந்தீபன் என்ற எனது அறை நண்பர்கள் மற்றும் இதே காலத்தில் என்னை நெருங்கியிருந்து என்னில் அக்கறையா யிருந்த லதீபன், ராகுலன், அஜிந்தன், சிவரஞ்சன், மணிமாறன், அனோஜிதன், இலங்கேஷ், சதீஸ்வரன், ஞானகரன், நிமல்ராஜ், சசிக்குமார், சுமன், றபேஷன், கேசவன் போன்ற பலர் இருக் கிறார்கள். அவர்களை இங்கு நினைவுகொள்கிறேன். அவர்கள் எனது வலி, அச்சம், சொற்கள் எல்லாவற்றிலும் கலந்திருக் கிறார்கள். இதே நகரத்தில் என்னுடன் பழகிய தெருக்களில் கொல்லப்பட்ட, இன்றுவரை காணாமல்போன எனது இரகசிய நண்பர்களையும் இங்கு நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

திருநெல்வேலி, **தீபச்செல்வன்**
யாழ்ப்பாணம்.
19 மே 2010

## விரட்டப்படுகிற தெருவில் அறுகிற செருப்பு

*நாய்கள் இன்னும் குரைத்தபடியிருக்கின்றன*
*சலனமற்ற இரவில்*
*எல்லோரும் கொள்ளுகிற மரணத் தூக்கத்தில்*
*ஒரு கொடுங்கனவு*
*என்னைத் தின்று முடிக்கிறது.*

*யன்னல்வழி நுழைந்து*
*யாரோ என்மீது பாய்கிறார்கள்.*
*எனினும், எனது நகரம் அமைதியுடன்தான் இருக்கிறது.*
*பொருளற்ற குறட்டைகள்*
*சுவர் இடுக்குகளின் வழியாக*
*நுழைந்து வெளியேறுகின்றன.*

*தனித்து விடப்பட்ட ஒற்றை ஆடாக*
*பலிக் கிண்ணத்தின் முன்னால்*
*நின்றுகொண்டிருக்கிறேன்.*
*பெரு ஓட்டைகள் போடப்பட்ட உங்கள்*
*கதவுகளில் நுழைபவர்கள்*
*என்னை விரட்டுகிறார்கள்.*

*சிறு தெருக்களும் பறிபோகின்றன.*
*விலத்தி வைத்திருக்கிற சொற்களை*
*எங்கோ போட்டெறிந்திருக்க*
*முகங்களைப் பயங்கரம் ஊடுருவுகிறது.*

*ஒவ்வொரு இரவும் மரணங்களுடன் முடிகிறது.*
*யாரோ விரட்டிக்கொண்டிருக்கிற தெருவில்*
*தினமும் அறுந்து போகின்றன செருப்புகள்.*

**20.01.2009**

# முத்தமிடக் காத்திருந்த நாள்

விசர் பிடித்த மோட்டார் சைக்கிள்
விழுங்கிய நகரத்தில்
எனது முகம் தனியே தொங்குகிறது.
ஆட்களில்லாதவர்களின் வார்த்தைகளை
கொழுவிய புத்தகக் கடையில்
புத்தகங்களினிடையில்
சொருகப்பட்டிருந்தது ஒரு துப்பாக்கி.

உன்னை முத்தமிடக் காத்திருந்த நாளில்
என் கடைசிக் கவிதை
கொலை செய்யப்பட்டிருந்தது.

ஆமணக்கம் விதைகளை
தின்று மயங்கிய குழந்தைகள்
திரும்பி அழும் சத்தத்திற்கு அருகில்
கிடந்தன சவப்பெட்டிகள்.
உன் முத்தத்திற்கும்
என் கவிதைக்கும் இடையில்
ஒரு நூல் வளருகிறது.

அந்த நூலை அறுக்கிறது
என்னை அவர்களின் குருதிச் சொற்களால்
எழுதிய சுவர்களிலிருந்து திரும்புகிற துப்பாக்கி.
என் கடைசிக் கவிதையை
எழுதிய தாள்களினை மூடுகிறது
ஒரு இராணுவத் தொப்பி.

நான் உன் முத்தத்திற்காகவும்
பேனாக்களை எடுத்துச் செல்கிறேன்.

நாம் குழந்தைகள் நிறைந்த வீட்டில்
சோறு சமைத்துக்கொண்டிருந்த பொழுது
படலைத் துண்டுதுண்டாய்ச்
சிதைந்து போனதை நீ கண்டாய்.
சிதைந்த நகரத்தில்
திறந்திருக்கும் தேனீர்க்கடைக்கு
உன்னை இன்னும் அழைத்துச் செல்லவில்லை

குழந்தைகள் அழைத்து வரப்பட்ட நகரத்தில்
நான் இன்னும் உன்னை முத்தமிட வேண்டும்.
மிகவும் பிரியத்துடன்
முத்தமிடக் காத்திருந்த நாளில்
குருதி கசிந்த கைகளினால் எழுதிய
கடைசிக் கவிதையினோடு
நான் கொலை செய்யப்பட்டிருந்தேன்.

## பாழ் நகரத்தின் பொழுது

பாழடைந்த தெருவில் சொருகப்பட்டவர்களின்
குருதியின் மேலால்வடிகிறது
சொற்களுடன் கலந்திருந்த இளம் கனவு.

மற்றும் சில இரவுகளைப் பறித்த சந்தியில்
அச்சத்தின் கனவு தொடங்குகிறது.
விடிந்திராத இளங்காலையை நசித்து
முடிவுபடுத்துகிற கறுப்பான பின்னேரத்தில்
உதிர்த்தெறியப்பட்டன எனது சொற்கள்.

தொலைபேசி எங்கும்
துவக்கு புகுந்து
அலறிக்கொண்டிருக்கிற இராத்திரியில்
எங்கும் செல்ல இயலாது
தோற்றுப்போன சொற்கள்
கட்டிலின் கீழாய்க் கிடந்து
முதுகைக் குத்திக் கொண்டிருக்கின்றன.

தூக்கிலிடும் நாட்களைப் பற்றியும்
மரணம் அளிக்கும் முறையினைப்பற்றியும்
அவர்கள் என்னிடமே சொல்லிச் சென்றனர்.
விலங்கிடப்பட்ட சொற்கள்
கீழே துடித்தலைய
அதிகாரம் என்னைத் தூக்கி
மின்கம்பத்தில் சொருகுகிறது.

பாழடைந்து போயிருக்கிற நகரத்தில்
மண் தின்கிற கால்களை
ஊடுருவி
ஒற்றை நாய் வந்து கால்களை நக்கிச் செல்லுகிறது.
வரிசையாக புன்னகைகளால்
துவக்கு
சோதனையிட்டுப் பிடுங்கிக்கொண்டிருக்கிறது
இயல்பான வாழ்வை.

கூர்மையான துவக்கு
எதை வேண்டுமானாலும் செய்யும்.
என்னை உருவி எடுத்துக்கொண்டு
அனுப்புகிற பழுதடைந்த பொழுதில்
தெருவிளக்குகள் அணைந்துபோய்விட்டன.

கறுப்புத்துணியால் போர்த்து
வந்திருக்கிறது பிரியமான நண்பனின் முகம்.
விளக்கற்றுக் கிடக்கின்றன வீடுகள்.

நான் கண்டேன் சிவப்பு மையால்
நனைத்தெடுக்கப்பட்டிருக்கிற எனது பெயரை.
பூர்வீக நகரத்திலிருந்து
பிடுங்கப்பட்டிருக்கிற எனது வாழ்வை.
துடிதுடித்துக் கலைகிற என் கனவுகளை.

கதவுகளுக்குப் பின்னால்
யாரும் அறியாத இருட்டில் ஒதுங்கியிருக்கிறது
பாழ் பொழுதொன்றில் விலங்கிடப்பட்ட சந்தி.

**10.02.2009**

என்னை விசாரணை செய்வதற்காக இராணுவம் சுற்றி வளைத்தது அன்று மாலை 5.00 – 6.00 பாழ் நகர வீதியொன்றில் நான் தடுக்கப் பட்டு மரண எச்சரிக்கை கொண்ட விசாரணை நடத்தப்பட்டது.

## திருவிழாவில் மண்சுவரில் மோதுண்ட குழந்தை

*காணாமல்ப்போன குழந்தை*
*கடவுளை விளையாடக் கேட்டிருந்தது.*
*பொம்மைகள் தொங்கும்*
*திருவிழாவில்*
*நமது மணல்தரை சேறாகிக்கிடக்கிறது.*

*முட்கள் முளைத்திருக்க*
*புதைந்து கொண்டு வருகிறது தேர்.*
*இரத்தம் வடியும் கால்கள்*
*தீ மிதிக்கின்றன.*
*தேர்களில் இருள் நிரம்பிக்கிடக்க*
*பூக்கள் கருகியிருந்தன*
*வடத்தின் நீளம் சுருங்கி*
*ஏதோ ஒரு சுவரில் மோதி அறுகிறது.*
*கால்களுக்குள் ஒளி புதைகிறது*

*கடவுளின் தலையை காணாதபோதும்*
*காய்ந்த தலைகளின்மீது*
*கைகள் கூப்பியிருந்தன.*

*மணல்சுவர்களிற்கிடையில்*
*நடக்கும் திருவிழாவில்*
*காணாமல்போன குழந்தையை*
*தேடித்திரிகிற மனைவியிடம்*
*கண்கள் இல்லாத பொம்மைகள் இருந்தன.*

*சுற்றிச்சுற்றி மணல்சுவர்களுக்கிடையில்*
*குனிந்தபடி இழுக்கும்*
*எல்லாத் தேர்களிலும் இருந்த கடவுள்களின்*
*கண்களிலிருந்தும் இரத்தம் கசிந்தது.*

நானும் அவளும்
முதன் முதலில் பார்த்துப்பேசிய
மணல்த்தரையில்
காய்ந்து விடாத நமது முத்தத்துடன்
புதைந்து கிடந்தன
குழந்தையின் வளையல்கள்.

கடவுளை பொம்மை என்று
குழந்தை கூறியது ஞாபகத்திற்கு வருகிறது.

**20.09.2008**

## பயமுறுத்துகிற இருள்

அச்சம் தருகிற இராத்திரிகளையும்
ஒரு சிறிய பெட்டியாய் சுருங்கிய பகல்களையும்
எனக்குத் தந்தீர்கள்!
எல்லாத் தெருக்களும்
என்னைக் கண்டு அஞ்சுகின்றன.
தெருவில் கரையில் பதுங்கியிருக்கின்றன
என்னைத் தின்பதற்கு காத்திருக்கிற கத்திகள்.

என்னிடம் எந்த சொற்களுமற்று
மௌனத்தால் கைது செய்யப்பட்டிருக்கிறேன்.
அச்சம் தருகிறதாக என் கவிதைகளை
எறிந்தீர்கள்.
உங்கள் பகலில் பாம்புகள் அலைகிறதை
நான் கண்டேன்.
எனது பிரதேசத்தில் தரப்பட்ட தெருவில்
அகதியாய்த் திரிய
என்னுடைய நினைவுகளை
நான் இழந்து வருகிறேன்.

அடையாளங்களற்ற வாழ்வில்
நான் எதையும் உணரவில்லை.
நிரந்தரமான அடிமையைப்போல என்னை
சித்திரிக்கிறது பறிபோயிருக்கிற தெரு.
மிகவும் நீளமாகப் போகின்றன எல்லாத்திசைகளும்.
அழுவதற்கும் இடமில்லாது
அலைந்து கொண்டிருக்கிறேன்.

அம்மா சுட்டுத் தருகிற ரொட்டிகளையோ
தங்கையுடனான சண்டைகளையோ
மீளக் கொண்டாடுகிற நாள்கள் வரப்போவதில்லை.
வீடு பற்றியிருந்த நினைவுகள்
சிதறிப்போயிருக்க கால்கள் அலைகின்றன.

எனக்காக காத்திருக்கிற மரணம்
இந்த தெருவொன்றில் முடிந்துபோகட்டும்.
நிறைவேறாத கனவுகளுடன்
மண்ணை முத்தமிடுகிறேன்.

இருளில் குவிந்திருக்கின்றன
என்னைத் தொடருகிற எல்லாரது முகங்களும்.
அந்நியமாகிற எனது கடலிலும்
முற்றிலும் மாற்றப்படுகிற மண்ணிலும்
இருள்தான் பரவிக்கொண்டிருக்கிறது.

மீண்டும் மீண்டும்
பயமுறுத்திக்கொண்டேயிருக்கிறது இருள்.
இருளே உன்னைக் கண்டு
நான் அஞ்சுகிறேன்.
உன்னையும் அவர்கள்
என்னிடமிருந்து பிரித்தனர்.
நான் உணருகிறேன்
இருள் பெரும் புயலாக வருகிறது.
என்ன செய்ய?

**08.04.2009**

அன்றிரவு மீளவும் இராணுவத்தால் அச்சுறுத்தப்பட்டது

# விடுபடுதலின் பலி

படிகள் பிரிந்து விழுகின்றன.
உன்னிலிருந்து நான் விடுபடத்துடிக்கிற
எத்தனங்களில்
கனவிலிருந்தும் தூக்கத்திலிருந்தும்
அறிவுறுத்தப்பட்டபடி சுலபமாக விடுபடுகிறேன்.
மீளவும் மீளவும்
நீ அச்சுறுத்தியபடியிருக்கிறாய்.
பக்கங்களைப் பூட்டிக்கொள்ளுகிறேன்.
நீ சொல்லி அனுப்பியபடி
கனவைத் துறந்து
நிறமற்றுக் கிடக்கிறது இரவு.

எழுதிய கவிதைகளினை புதைத்துவிடுகிறேன்.
வெளித்தள்ளுகிற
சொற்களை மலக்குழியில் களித்து
ஒதுங்கியிருக்கிறேன்.
என்னைக் கவர்ந்து செல்லக் காத்திருக்கிற
தெருவில் நீ நிரப்பி விட்டிருக்கிறாய்
பச்சை மோட்டார் சைக்கிள்களை.

சந்தேகங்களாலும் விசாரணைகளாலும்
அழைத்துக்கொண்டு
குருதி உறைந்த அறைகளைத் திறந்துகொண்டிருக்க
சிறகுகளில் விலங்கு அணிந்த
கனவின் பறவை துடித்து விழுகிறது.
நீ அழைக்க வந்து செல்லுகிறேன்.
துப்பாக்கிகளை
கூர்மையாக்கியபடி திருப்புவதைக் கண்டு
கனவுடன் நான் தூக்கங்களையும்
விடுவித்துத் திரிகிறேன்.
எனது உயிரை
உனது தொலைபேசி உறிஞ்சிக்கொண்டிருக்கிறது.

திறக்கப்பட இருக்கிற பாதையில்
முதலாவதாக நான் வெளியேறிவிடுகிறேன்.
எனக்கென்று இங்கிருந்தவைகளை
விட்டுச்செல்லுகிறேன்.
கனவைக் கைவிடுவது பற்றிய
உனது எச்சரிக்கை
மரணங்களின் வெளியில்
நிகழ்ந்தபடியிருக்கிறது.

இணைக்கப்பட்டிருக்கிற
நீண்ட தெருவில் அலைச்சல் காத்திருக்க
குறித்த திகதியில்
யாருக்கும் சொல்லாமல்
இருட்டில் நான் போய்விடுகிறேன்.
உன் வருகையினாலும்
திட்டங்களினாலும் நான் அகற்றப்படுகிறேன்.
எனது சனங்கள் காத்திருக்கின்றனர்
உனது விதிமுறைகளுக்குட்பட்ட
துப்பாக்கிகளை
அகலப்படுத்தவிருக்கிற வாழ்வுக்காய்.

பிரித்தெடுக்கப்பட்ட கனவால் செய்யப்பட்ட
கேலித்தனமூட்டுகிற பொம்மையை
நிறுத்தி வைத்திருக்கிறாய் பேருந்து நிலையத்தில்.
நீ எல்லாவற்றையும் பறித்ததையும்
இங்கிருந்து என்னைத் துரத்துவதையும்
யாரிடமும் சொல்லாமலிருக்கிறேன்.
உனது துப்பாக்கி எங்கும் ஊடுருவி நிற்கிறது.

இதனால் விளைகிற துக்கத்தையும்
இழப்பையும்கூட சுலபமாக மறைத்து
உனது நிகழ்ச்சி நிரலின் களிப்பில்
எந்த எதிர்ப்புமற்று என்னைப் பலியிடுகிறேன்.

அதிகாரத்தின் முன்னால்
விடுபடுதல் ஒரு பலியென நிகழ்கிறது.
படிகளில் வழிந்தோடுகிறது கனவு.

**30.05.2009.**

ஈழக்கனவிலிருந்து விடுபட்டு பாழ்நகரத்தை விட்டு
வெளியேறும்படி எச்சரிக்கை அனுப்பப்பட்டது.

# கறுப்புத் துணி மூடுகிற நகரம்

பாழாய்ப்போன சனங்களுக்கு எதிராகவும்
முகம் சுழிக்க வேண்டியிருக்கிறது.
சனங்கள் என்ன செய்ய முடியும்?

முதுகுகள் எங்கும்
துப்பாக்கிகள் குத்தியபடியிருக்கின்றன.
விலக்க முடியாத பேரணியில்
சொல்லித்தரப்பட்ட வாசகங்கள்
முழுவதுமாய்
நமக்கு எதிராய்
நமது வாயில் ஒலிக்கின்றன.

திணிக்கப்பட்டிருக்கிற கொடியின்
பற்களுக்கிடையில்
சிக்கித்தவிக்கிற தேசத்தின் வெற்றிக்கு
நமது சகோதரர்களாலே
பரணியெழுதப்படுகிறது.
சனங்கள் தமது சனங்களுக்கு
எதிராய் கிளப்பப்படுகின்றனர்.

துப்பாக்கி எல்லாவற்றையும்
ஆண்டு கொண்டிருக்கிறது
அதிகாரம் எல்லாவற்றையும்
மாற்றி அமைக்கிறது.

ஒடுங்குகிற சனங்களின்
வார்த்தைகள் நசுக்கப்படுவதற்கு
சனங்களே திரட்டப்படுகிற நகரத்தில்
எதிரியின் அதிகார மொழிப்பாடல்
காதைக் கிழித்தொலிக்கிறது.

நாம் பாடலின் அர்த்தத்தை
புரியாதவர்களாயிருக்கிறோம்.
கறுப்புத்துணிகளால்
மூடுண்டு வாழுகிற நகரத்தின்
தலைகள் ஆடுகிறபோது
துப்பாக்கிகளே பேசுகின்றன.

சொற்களற்ற நகரத்தில்
மனிதர்கள் துண்டிக்கப்பட்டு
திரட்டப்படுகின்றனர்.

பாழாய்ப்போன சனங்களின்
கையில் திணிப்பதையெல்லாம்
பார்வையிடுவதற்கு முன்பே
படம் பிடிக்கப்படுகிறது
எல்லோருடைய கால்களும் உருகுகின்றன.

கறுப்புத்துணி தலைகளை தின்று விடுகிறது.
முண்டங்கள் திரியும் வீதியில்
அடிமைக்கு வலுவான
வாசகங்கள் தொங்குகின்றன.

அதிகாரம் தனது வெற்றியை
திணித்துவிட்டு
அடிமையை கட்டாயம் செய்து தருகிறது.
வீதியை கடக்கிற அவகாசத்தில்
விடுதலை மறக்கிறது
நாடு மறக்கிறது
கறுத்த நகரத்தின் சந்தையுடன்
வாழ்வு முடிகிறது.

நமது கண்களை நாமே
பிடுங்குவதைப்போலவும்,
நமது உடலை நாமே
கூறிடுவதைப்போலவும்
அதிகாரம் எல்லாவற்றையும்
எல்லாரையும் பிரித்தாளுகிறது.
பாம்புகள் வழிகாட்டுகிற வீதியில்
தொன்மையான சொற்கள் பலியிடப்பட
முகங்களை குத்துகிற வாசகங்கள்
எழுதித்தரப்பட்டிருக்கின்றன.

எனது பாழாய்போன சனங்களே
துப்பாக்கியில் சுட முடியாத
என்றைக்குமான எல்லாவற்றுக்குமான மனது
விலக்க முடியாத பேரணியில்
மிதிபடுவதைக் கண்டு செல்லுங்கள்.

*கடைசியில் உணவில் விஷமிருக்கிறது*
*படுக்கை சுடலையாகிறது.*
*எழுதித்தரப்பட்ட வாசகங்கள்*
*தூக்கத்தில் கொலை செய்துவிட்டுப் போகின்றன.*

*பாழாய்ப்போன சனங்களுக்கு எதிராகவும்*
*முகம் சுழிக்க வேண்டியிருக்கிறது.*
*அதிகாரம் எல்லாவற்றையும்*
*தனக்கு ஏற்றமாதிரி மாற்றியமைக்கிறது.*
*சனங்கள் என்ன செய்ய முடியும்?*

**28.12.2008.**

யாழ்ப்பாணத்தில் மக்கள் சிலர் இலங்கை அரசின் வன்னி இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாக பேரணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## ஜெபங்களின் மீதெழுகிற அழுகை

*ஜெபங்களின் மீது அழுகை எழுகிறது*
*ஜெபமாலைகளின் பேரணியில்*
*பைபிள்களை வாசித்தபடி*
*திருப்பாடல்களைப் பாடுகையில்*
*கொலைசெய்யப்பட்ட பறவைகள் வந்து போயின.*

*தேவாலயங்களைவிட்டு*
*வெளியில் வருகிறபோது*
*சிலுவையைச் சுமந்து திரிகிறதாய்*
*கடவுள் சொல்லுகிறார்.*

*வீட்டுக்கும் தேவாலயத்திற்கும் இடையில்*
*பாடாய்க் கிடக்கின்றன சிலுவைகள்.*

*ஆணிகள் அறையப்பட்ட*
*மனிதர்களின் முகங்களில்*
*வழிகிறது கடவுளின் இரத்தம்.*

*சபிக்கப்பட்ட வாழ்விலிருந்து*
*மீளுவதற்காய் ஜெபித்தீர்கள்*
*அழகிய தோட்டம் பற்றிய கனவுடன்*
*அழைத்து வரப்பட்ட குழந்தைகள்*
*ஆலயத்தைச் சூழ*
*விளையாட ஏங்குகிறார்கள்*

*இந்த அழுகை வழியும்*
*ஜெபங்களில் சாத்தானுக்கு எதிராய்*
*சிலுவையுடன் செல்வதை நான் கண்டேன்.*

**21.09.2008**

வன்னியில் நிகழ்ந்துகொண்டிருந்த படுகொலைகளை நிறுத்தும்படி யாழ்ப்பாணத்தில் திருச்சபையினர் ஜெபமாலைப் பேரணியில் ஈடுபட்டனர்.

## எலும்புக்கூடுகள் நிறைக்கப்பட்ட வகுப்பறை

எனது முகத்தின் வெளியில்
மௌனம் ஒட்டப்பட்டிருந்தது.
எனது குரலை மடித்து
புத்தகத்தின் நடுவில்
ஒளித்து வைத்திருக்கிறேன்.

ஒரு சிறுவன் மீது
இராணுவம் துன்புறுத்தி
தாக்கியதைக் கண்டேன்.
ஒரு முதியவர் மீது
இராணுவம் துன்புறுத்தி
தாக்கியதைக் கண்டேன்.
எனது வெள்ளைச் சீருடைகளின்
நிறங்கள் உதிர்ந்து விழுகின்றன.

எனது கண்களின் மீது
படர்ந்திருந்த அந்த வன்முறைக்காட்சிகள்
இமைகளை அரித்து
விழிகளைக் குடைந்து கொண்டிருக்கின்றன.
அவர்களுக்கு... எனக்கு...
என்று நீளுகிற
அந்த சீருடைகளின் கொழுத்த அதிகாரம்
எனது இனம் முழுவதுமாய் பரவுகிறது.

நமது குழந்தைகளின்
முகங்களைக் குத்துமளவில்
நீண்டு கூர்மையாயிருந்தது.
நிறைக்கப்பட்ட துப்பாக்கிகளின்

களியாட்டம்
சிறிய சைக்கிளில் போகும்
சிறுமி மீதான குறியாயிருந்தது.

எல்லோருடைய முகங்களும்
சுருங்கியிருக்க
தீராத வலிகள் எழுதப்பட்டிருந்தன.
மனித நேயமும் உரிமைகளும் பற்றி
பாடம் நடத்தப்பட்ட வகுப்பறையின்
கூரைகளிலும் சுவர்களிலும்
கிழிந்த புன்னகையோடு
எலும்புக்கூடுகள் வரைந்து நிறைக்கப்பட்டிருந்தன.

புத்தகத்தின் நடுவில்
வைத்திருந்த எனது குரல்
சைக்கிளில் சென்ற சிறுமியைப் போல
கரைந்து கிடக்கிறது.

# பூனையும் நாயும் நிரம்பிய வீடு

என் சாப்பாட்டிற்குஅருகில்
என் பூனை காவலிருக்கிறது
சாப்பாட்டின் மிகுந்த வாசனையில்
உடைகள் வேகமாகக் கழருகின்றன.

வீட்டிற்கு வெளியே இப்பொழுதெல்லாம்
மனிதர்களைச் சந்திக்கமுடிவதில்லை
நடமாடித்திரிபவர்களிடம்
உண்மை முகங்கள்
மருங்கியிருக்கின்றன
வீடு வரும்பொழுதெல்லாம்
அந்த மனிதர்களின்
பொய்முகங்கள் பின்தொடர்ந்து
துன்புறுத்துகின்றன.

பூனை கால்களை உரசும் பொழுதெல்லாம்
எல்லா வலிகளும் அகலுகின்றன
நிம்மதியைக் கெடுக்கிற
ஒலிகளின் மத்தியில்
பூனையின் குரல்
சங்கீதமாய் ஒலிபரப்பாகிறது.

எங்கள் வீட்டில்
பூனைக்கும் நாய்க்கும் கூட
நல்ல நெருக்கம் இருக்கிறது
அவைகளின் தோற்றம் விகாரப்பட்டு
நெருக்கத்தின் வடிவமாய்
சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்தன.
பூனையும் நாயும்
எப்பொழுதும் ஞாபகமாயிருக்கின்றன.

வீட்டில் நெருக்கமும் ஆறுதலும் பரவுகிறது
அமைதியும் ஒழுங்கும் நிலவுகிறது
பூனையும் நாயும் கூடிய எனதுவீடு
எப்பொழுதும்
எல்லாவற்றுக்குமாகக் காத்திருக்கிறது.

## மாடு சூரியனை மேய்ந்துவிட்டுப் போகிறது

*எல்லா வார்த்தைகளும் தகர்ந்து விட்டன*
*மிக வேகமாக வீசியெறியப்பட்ட அந்தக் குரூரக்கல்லில்*
*நமக்காயிருந்த வார்த்தையின்*
*கடைசிமலர் உடைந்து கிடக்கிறது.*

*மிஞ்சியிருந்த சொற்களின் வாசனையும் குளிர்மையும்*
*நெருப்பாய் தகிக்கிறது.*
*எல்லோரும் சேர்ந்து வெளியிட்ட*
*மிகப்பெரிய புன்னகை*
*ஒரு சூரியனில் பிறந்து அதுவாய் விளங்கியது.*
*அதன் நிறம் சிதறடிக்கப்பட்டிருக்கிறது*
*கீற்றுக்கள் பிய்க்கப்பட்டுள்ளன.*

*எல்லாக் கைகளின் முன்பும் மலராய்க் கிடந்தது.*
*நமது குரல்களின் எல்லா வார்த்தைகளாயும்*
*சிறகுகளாயும் விரிந்து பறந்தன.*
*பூந்தோட்டத்தில் வைத்தே*
*நமது மலர் சாகடிக்கப்பட்டது*
*ஒரு அதிகாலையிலேயே*
*நமது சூரியன் கிழித்துப் போடப்பட்டது.*

*கிணறு வற்றி வெறுமையாய்க் கிடக்கிறது.*
*நிறம் மாறிய புன்னகைகளும்*
*ஒலியின் முனைப்புகளுமற்ற வார்த்தைகளும்*
*நமது வேலியில் சிக்குப்பட்டுக் கிடக்கின்றன.*
*வேலியில் அமர்ந்து காத்திருந்த*
*பறவையின் முகத்தில்*
*இப்பொழுது மாடு ஒட்டப்பட்டிருக்கிறது.*

*கிணற்று வாளியில் தண்ணீர் குடித்த மாடு*
*மலரைச் சிதைத்துவிட்டு*
*சூரியனை மேய்ந்து கொண்டு*
*வெள்ளையாய்ப் போகிறது.*

**01.11.2007**

சமாதானப் போராளி தமிழ்ச்செல்வன் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

# இந்த நாகரிகத்தின் வேர் படுகிறது

*01*

*எங்களில் யாருக்கும்*
*இங்கு வாழ்க்கையில்லை*
*படையெடுத்து வந்தவர்களின்*
*வாழ்வுக்குள் நசியக்கூடிய*
*சிறிய வாழ்க்கை ஒன்றை*
*ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்.*

*இனி யாருடைய ஆதிகளும்*
*இங்கிருப்பதாய் மார்பு நிமிர்த்த முடியாது*
*இப்பொழுது நிமிர்ந்த மார்புகள்தான்*
*சரிக்கப்பட்டிருக்கின்றன*
*இந்தக் குறியில் எப்படி நாங்கள்*
*நமது மார்புகளை நிமிர்த்தப்போகிறோம்?*

*நாம் எல்லோரும்*
*குனிந்து கொண்டுதானே போகிறோம்.*

*02*

*எங்கள் நாகரிகத்தின் வேர் படுகிறது*
*இந்த நகரத்தை விட்டு*
*ஒவ்வொருவராக வெளியேறி வருகிறார்கள்*
*இது கைவிடப்பட்ட நகரமாகிறது*
*துண்டிக்கப்பட்ட தனிமையிலிருக்கிறது.*

*ஆதியைத் துறந்தவர்களாய்*
*வெளிறிய வீதிகளிலிருந்து*
*கால்களைத் தூக்கி படகுகளில் நிரப்பி*
*மடக்கிக்கொள்கிறார்கள்.*

*இந்த நகரத்தை*
*யாருக்காக விட்டுச்செல்கிறோம்?*
*இங்கு யாருடைய வாழ்வு*
*சாத்தியப்பட்டிருக்கிறது?*

03

நாங்கள் ஒரு சங்கிலியன் சிலை
வளர்த்திருக்கிறோம்
இப்பொழுது சங்கிலியனின் சிலையை
எங்களால் நிமிர்ந்து பார்க்க முடியாதிருக்கிறது
அது சிதைக்கப்பட்டிருக்கலாம் என்ற
ஐயத்துடன்
கண்களை வேலியின் கீழாகச் சொருகிப்போகிறோம்.
எங்கள் முன்னவர்களின்
நடுகல்கள், நினைவுத் தூபிகள்
சில இரவுகளில் அகழ்ந்து மண்ணாய்க் கிடக்கின்றன
எங்களின் மம்மிகள் இல்லை என்றாகின்றன.

இனி இந்தச் சுவர்களுக்கு
வண்ணம் பூசவியலாது
அதில் பாசி படர்ந்திருக்கிறது
எங்கள் வாசகங்கள் மறைக்கப்பட்டுவிட்டன.
எங்கள் சுவர்களின் ஆணிகள்
துருப்பிடித்து உக்கிவிட்டன.

எங்கள் நாகரிகத்தின் சுவடுகளை
சுவர்களில் தொங்கவிடமுடியாது.

சிறைச்சாலை வண்ணம் பூசப்பட்டிருக்கிறது
அரச சிறைச்சாலை அடைக்கலம் புகுவதற்கும்
அகதிகளாக்குவதற்கும் தரப்பட்டிருக்கிறது
நாங்கள் நடமாட முடியாது
உயிரைப்பொத்தி வைத்திருக்கலாம்
கால்களில் கட்டுப்போடப்பட்டிருக்கும்.

04

துப்பாக்கிகளால்
தவறவிடப்பட்டவர்களாயிருந்தாலும்
எதுவரை வாழப்போகிறோம்
இங்கு ஒரு சந்ததி
எப்படி உருவாகப்போகிறது?
நீ சந்ததியை உருவாக்க திறனற்றவனாக்கி
விடுவிக்கப்பட்டிருக்கிறாய்
இவளின் கருவிலிருக்கும்
குழந்தையின் ஆயுள் எவ்வளவு நீளமானது?
குழந்தையைவிட
இவளின் கருவில் என்ன நிறைந்திருக்கிறது?

நீ குழந்தைகளுக்காக
சுவர்களில் வரைந்திருந்த உனது நாகரிகத்தின்
வீரதீரக் காட்சிகள் அழிந்துவிட்டன
மீண்டும் அதை உன்னால் வரைய இயலுமா?
நமது நாகரிகத்தின் நிறங்கள்
உதிர்கையில் உருவப்படுகையில்
வெளிறிய பிள்ளைகள்
காலம் பிசகிய பள்ளிக்குப் போகிறார்கள்.

05

நிறைய வீடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன
பாழடைந்து விட்டன
நிறைய வீதிகள் சருகுகளால் நிரம்பி உள்ளன
ஒன்றில் அவர்கள் வெளியேறியிருப்பார்கள்
அல்லது கொலைசெய்யப்பட்டிருப்பார்கள்
சில வீடுகள் சோபையிழந்து புகைகின்றன
அங்கு அவர்கள்
ஊமைகளாக்கப்பட்டிருக்கலாம்
குருடர்களாக்கப்பட்டிருக்கலாம்.

இங்கு யாருடைய விழிகள் திறந்திருக்கின்றன?
இங்கு யாருடைய வாய்கள் பேசுகின்றன?
இங்கு யாருடைய நடமாட்டங்கள் நிகழ்கின்றன?

எங்கள் வீதி என்ற துணிச்சலுடன் போகிறோமா?
நாம் பிரதான வீதியில்
செல்ல அனுமதிக்கப்படுகிறோமா?
வைத்தியசாலைப் பயணத்திற்கு
ஒரு மூதாட்டி நெடு நேரமாய் காத்திருக்கிறாள்
எல்லோரும் தடுக்கப்பட்டு
உள்வீதிகளில் நிறுத்தப்பட்டிருக்கிறோம்
இவைகளில் நசுங்கி சில பிள்ளைகள்
தாமதமாகப் பள்ளி போகிறார்கள்.

06

நமது நாகரிகத்தின் வேர் படுகிறது
நமது நாகரிகத்தின் வாழ்வு அழிந்துவிட்டது
என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்வோமா?
இந்தக்குடா
இப்பொழுது எதற்கு விரிந்திருக்கிறது?

படையெடுத்தவர்கள் நிறைந்திருக்கிறார்கள்
அவர்களுக்குக் கையாள
பயங்கர ஆயுதங்கள் நிறைந்திருக்கின்றன
அவர்கள் மரணத்தை நிறைத்திருக்கிறார்கள்.

இதற்குள்ளாகவே அந்த
வாழ்வு தரப்பட்டிருக்கிறது
நிறம் உருவப்பட்ட வாழ்வை ஏற்க
நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்
அல்லது அரச படகு இருக்கிறது
கால்களை மடக்கி அதில் ஏறிப்போகலாம்?

நமது வாழ்வில் வெட்கம் வழிகிறது
நிமிர்த்த முடியாத மார்புகள் சரிகின்றன.
நமது வர்ணங்கள் எங்கிருக்கின்றன?

**25.11.2007**

# கடைசி உணவு நாட்கள்

*01*

*நமது கோப்பைகள்*
*வெறுமையாயிருக்கின்றன*
*துயரங்கள் நிரம்பிய கோப்பைகளோடு*
*நாட்கள் கடைசியாகிவிட்டன.*
*கோப்பையில் நிரம்பியிருக்கும் துயரத்தை*
*என்னால் சாப்பிடமுடியவில்லை.*

*இருட்டுப் பந்தலில்*
*நாற்காலிகள் இருட்டாகிக் கிடக்கின்றன*
*நான் திரும்பி வரமுடியாத*
*பிரதேசம் ஒன்றிற்குப் போகப்போகிறேன்*
*நான் வாழமுடியாத நகரம் ஒன்றில்*
*தங்கியிருக்கப்போகிறேன்.*
*கோப்பைகள் பாரமாயிருக்கின்றன.*

*02*

*எனக்கு மிகவும் பிடித்த*
*தோழனே என்னால் தாங்கமுடியாதிருக்கிறது*
*சாந்தம் அழிந்திருக்கும் உனது முகத்திலும்*
*சிவந்து கசிந்துகொண்டிருக்கும்*
*உனது கண்களிலும் சூழ்ந்திருக்கும் துயரத்தை*
*கொஞ்சமும் பார்க்கமுடியாதிருக்கிறது*
*நான் உன்னோடு*
*பேச முடியாமல் மௌனமாயிருக்கிறேன்.*

*நமது விளக்குகளை*
*இரவுகள் விழுங்கிவிட்டன*
*எனது பயணம் இருட்டு வீதியில் தத்தளிக்கிறது.*

*நாம் வளர்த்த மரத்தின் கீழ்*
*அடையாளம் தெரியாத*
*நிழல் படருகிறது*
*அந்த மரத்தின் வேர் படுகிறது*
*சந்தர்ப்பங்களற்றிருக்கும்*
*நமது நாற்காலிகளில்*
*தெரு நாய்கள் மலம் கழித்திருக்கின்றன*
*சிறுநீர் பெய்திருக்கின்றன.*

*எனது கோப்பை நெளிய*
*உணவு பழுதாகி கிடக்கிறது.*

*03*

*தோழனே எல்லாம்*
*கடைசி என்றாகி விட்டது*
*இவை கடைசி உணவாகிவிட்டது.*

*நீயும் நானும் கூடியிருக்கவே*
*விரும்புகிறோம்*
*நான் விலகியிருக்கிறேன்*
*எனக்கு சிலுவை காத்திருக்கிறது*
*எனக்கு ஆணிகள் காத்திருக்கின்றன*
*எனது குருதி பகிர்ந்துண்ணப்படவிருக்கிறது.*

*நம்பிக்கையற்ற நகரத்திற்கு*
*நம்பிக்கையின்றியே போகிறேன்*
*பயங்கரம் நிரம்பிய*
*வீதிகளில் நடக்கப்போகிறேன்*
*ஆபத்தான வண்டிகளில் ஏறப்போகிறேன்*
*சுடும் வெந்நீரில் நீந்தப்போகிறேன்*
*நான் திரும்புவதைப்பற்றியே*
*நீ யோசிக்கிறாய்?*

*நாம் நிச்சயமற்ற இனத்திலே*
*பிறந்திருக்கிறோம்*
*அவர்களது கோப்பையில்*
*நிரம்பியிருக்கும்*
*எனது குருதியை நினைத்து*
*அச்சப்படுகிறாய்*
*பலிகளுக்கு ஏற்கப்பட்ட*
*இனத்திலிருந்து பேசுகிறோம்.*

*04*

*அதிகாரங்கள் நம்மை*
*தேடி வதைக்கின்றன*
*வன்முறைகள் நம்மை மொய்க்கின்றன*
*நமது அலைச்சல் நீளுகிறது*
*நாம் அமைதிக்காக*
*அதிகாரங்களோடு போராடுகிறோம்.*

*எனக்கு மிகவும் பிடித்த தோழனே*
*நான் போகிறேன்*
*எனக்கான முகத்தினோடு.*
*மிகப்பாரமான எனது பயணப்பையில்*
*இந்தக்குரல் மொத்தமாய்க் கிடக்கிறது.*

# பாட்டியின் கதையும் குழந்தைகளின் உலகமும்

வானம் இடிந்து விழுந்திருந்தது
பாட்டியின் முகத்தில்
பழைய கதைகள் உறைந்திருக்க
புதிய உலகம் பற்றிய கதை
தெரியத்தொடங்கியிருந்தது
குழந்தைகள் கதைக்காகப்
பாட்டியைச் சூழ்ந்தார்கள்.

பழைய கதைகளின் ஐதீகமும் மர்மமும்
குழந்தைகளிடம் ஆர்வமற்றிருந்தது
ஐதீகமும் மர்மமுமுடைய
கனவுலகின் கதையில்
தீவிரம் அற்றுப்போயிருந்தது.
உலகம் வேறொன்றாக இருந்தது.
குழந்தைகள் பாட்டியிடம்
எதார்த்தமும் நடைமுறைச் சாத்தியமுமுடைய
கதையை எதிர்பார்த்தார்கள்.

நிலவு கலவரத்தில் சிக்கியிருந்தது
முற்றங்கள் பாதிக்கப்பட்டு சுருங்கிக்கொண்டிருந்தன.
சதையும் குருதியுமுடைய
மண்டைஓடுகளின் மத்தியில்
குழந்தைகளின் விளையாட்டு வீடுகள் குழம்பியிருந்தன.

பாட்டி புதிய உலகம் பற்றிய கதையை
அளக்கத் தொடங்கினாள்.

மண்டை ஓடுகளின் குவியல்கள்
நிரம்பியிராத உலகம் உருவாகப் போகிறது.
அங்கு மரங்கள்
கிழிந்திருக்கப்போவதில்லை

நிலவு கலவரமின்றியிருக்கும்
முற்றம் அச்சமின்றி விரிந்திருக்கும்
காற்றில் மரணத்தின் வாசனை இருக்காது.

சொற்களில் குருதியின்
வாசனை வீசப்போவதில்லை
பறவைகள் மீண்டும் தங்கள்
சங்கீதங்களை இசைக்கும்
தெருக்களில் சூழ்ச்சி இருக்காது
மரணங்கள் பற்றியும்
சவப்பெட்டிகள் பற்றியும்
நம்மில் யாரும் அறியாதிருப்போம்.
வானம் மனிதாபிமானத்தில்
வெளித்திருக்கும்
விழிகள்
எந்தக் காயங்களுமின்றி திறந்திருக்கும்
மிகப் பசுமையான காட்சிகளால்
அந்த உலகம் நிரம்பியிருக்கும்

எதார்த்தமுடைய கதையைக்
கூறியதாகப் பாட்டி திருப்திப்பட்டாள்
பாட்டியின் இருப்பில் நிம்மதியிருந்தது.
கதையில் நம்பகம் இருப்பதாக
குழந்தைகள் உணர்ந்தனர்.

குழந்தைகளின் விழிகளில் அச்சம் நீங்கின
பாட்டியின் வார்த்தையின் ஆர்வம்
குழந்தைகளை குதூகலிக்கச் செய்தது.

குழந்தைகளின் முகங்களில்
புதிய உலகம் நிகழத்தொடங்கியது.

**24.10.2007**

## கடலில் கரைந்த ஒரு துண்டுப் படகு

*நமது வாழைமரங்களை அழிக்க*
*அவர்கள் மிகப்பெரிய வாட்களோடு புகுந்தார்கள்*
*எல்லா வாழை இலைகளும்*
*கிழிந்து கிடக்கின்றன*
*பசுமையைக் காலடியில் போட்டு*
*மிதித்திருந்தார்கள்*
*காற்றின் கூடுகளைக் கிழித்தழித்தார்கள்.*

*நமது மிகப் பழமையான மண்*
*அரித்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தது*
*வீடுகளும் வீதிகளும் வாழ்வும்*
*கரைந்துகொண்டிருந்தன.*
*நிலவு அழுது வடிகிறது*
*மிகப்பசுமையான வாழையிலையில்*
*கலந்து படைத்திருந்த நமது முகங்களையும்*
*அவர்கள் கிழிக்க*
*நான் கடலில் மிதந்தேன்*
*நமது கண்கள் காற்றில் மிதந்தன*
*எனது முகத்தைக் காணவில்லை.*

*அலைகள் மொழிகளை*
*இழந்து அமைதியாயிருந்தன*
*கடலின் முகங்கள் வீங்கிப் பெருத்திருந்தன*
*நானிருந்த படகு அலைந்துகொண்டிருந்தது*
*இறுகிய தண்ணீர் மேடுகளில்*
*மோதி துண்டு துண்டாய் உடைந்தது.*

எஞ்சியிருந்த ஒரு துண்டுப் படகும்
கரைந்துவிட்டது
உப்புக்காற்று தேங்கிய
ஈரமான எனது வெள்ளைத்துணி
தவறிக் கடலில் விழுந்தது
நான் எடுத்து வந்த
அரிசி அடங்கிய சின்ன பொதிகளும்
கைதவறி விழுந்து கடலில் தாண்டன.

நான் கண்டேன்
எனதூரில் அவர்கள் கிழித்த
சில வாழையிலைகள்
கடலில் எறியப்பட்டிருந்தன
மீன்களும் கொலைசெய்யப்பட்டு
மிதந்துகொண்டிருந்தன.

**28.10.2007**

## அடருகிற இரவொன்றில் தின்னப்பட்ட கடல்

இரவு திசைகளைத் தின்று
பரபரத்துக்கொண்டிருக்க
நீ புறப்பட்டிருந்த கடலை
யாரோ தின்றுகொண்டிருந்தனர்.
கையில் இழுபட்ட
பிள்ளைகளின் மெலிந்த
தோள்களைத் தவிர
ஒன்றையும் எடுத்துவரவில்லை.

அலைச்சலின் பெருந்துயர்கள்
கடலில் உன்னைத் துரத்தி வந்தன
வலியின் கோடி முகங்கள் சுற்றியிருக்கிற
உன்னை நான் சந்திக்கப்போவதில்லை.
வளர்ந்துபோயிருக்கிற
தோல்வியின் சொற்கள் எதையும்
பகிரவேண்டாம்.
ஞாபகங்கள் துடித்துக்கொண்டிருக்கின்றன.

நடைகள் நிறைந்த மணலையும்
துண்டு நிலத்தின் பெரும் புகையையும்
சுருட்டி எடுத்து வந்து
பூவரசின் வேரைப் பன்றிகள் தின்னுகிற
கவிதை கொண்டு வந்திருக்கிறாய்.
அந்தப் பூவரசு சலசலத்துக்கொண்டிருந்த
பின்மாலையில்
முகத்தைக் கரைத்துத்தானே வழியனுப்பினாய்.

பன்றிகள் கிளறியெறிந்த வீதியில்
அந்த பூவரச மரத்தினடியில் கிடக்கிறது
நான் உன்னைச் சந்திக்கிற பொழுதுகள்.
நீ வைத்திருக்கிறாய்
பூவரச மரத்தின் துயர் படிந்த கிளைகளையும்
கிளறுப்பட்ட வீதியின் துகள்களையும்.

*நீரை விரித்துக்கொண்டிருக்கிற*
*அடரும் கொடிய இரவில்*
*காற்றில் பன்றிகள் முட்களுடன்*
*வந்தன என்கிறாய்.*
*தனித்துப் புறப்பட்ட பயணத்தில்*
*எல்லாமே கரைந்துபோகிறது.*

*வெறுமையின் கீழ் குந்தியிருக்கிற*
*உன்னைப் பார்க்கப்போவதில்லை.*
*நம்பிக்கை தரமுடியாதிருக்கிற*
*உரையாடல் ஒன்றும் உன்னுடன் வேண்டாம்?*
*கூடாரத்தில் மணல் உதிர்ந்து*
*உன்னை மூடிக்கொண்டிருக்கிறது.*

*காய்ந்துவிடாத குருதியையும்*
*மணல் குடித்து முடிக்காத கண்ணீரையும்*
*கொண்டு வந்திருப்பாய்.*
*கரை அரிபட்டுக்கொண்டிருக்கிற கடலை*
*நீ இறங்கிய பிறகும்*
*யாரோ தின்றுகொண்டிருக்கின்றனர்.*

கருணாகரனுக்கு

**07.05.2009**

## பதுங்குகுழியைவிட்டு அலைகிற வெளி

*மண் சிதறி மூடப்பட்ட பதுங்குகுழியில்*
*மூடுண்டு போயிற்று*
*கடைசிவரை வைத்துக் காத்திருந்த*
*உடைந்த முகத்தின் எச்சங்கள்.*
*எங்கள் வெளி அர்த்தமற்றுப்போய்*
*அந்தரத்தில் துடித்துக்கொண்டிருக்கிறது.*
*மண்ணில்*
*உலகத்தின் யுத்தம் நிகழத்தொடங்கியது.*

*மிகவும் பயங்கரமான வெளியில்*
*தூக்கி வீசப்பட*
*கொதித்துத் துடித்துக்கொண்டிருக்கிறது மனம்.*
*மண்ணடியில்*
*புதைந்துபோனது விரிந்த வானமும்*
*நெடுநாள் காணாதிருந்த நட்சத்திரங்களும்.*
*வாசல் அடைக்கப்பட்ட குழியில்*
*யாரோ அடைக்கப்பட்டு நாளாகிறது.*
*முகங்கள் வெளியில் தனித்தலைந்தன.*

*மூடிப் புதைத்துவிடப்பட்ட கிராமம்*
*பிணங்களின் கீழ் அழுகிக்கொண்டிருக்கிற வீடு*
*தென்னைமரங்கள் பிடுங்கி நிரப்பப்பட்ட கிணறு*
*எல்லாம் மூச்சடங்கி உயிர் துறக்கிறது.*
*முகமற்ற நகரத்தில்*
*அழிப்பின் சபதம் எழுதப்பட்டு*
*சிறையிலடைக்கப்படுகிறது.*

*அச்சத்தின் சனங்கள் வெளியில்*
*எடுத்துப் போடப்பட்டனர்.*
*உடைந்த சனங்களை மீளவும்*
*குழிகளில் போட்டு மூடிக்கொண்டு*

அழிவு புதைக்கப்பட்டு சமதரையாக்கப்பட்டிருக்கிறது.
மணல் பரப்பி நடந்து கொண்டிருக்கிறது
மனிதாபிமான யுத்தம்.

எண்ணி அடுக்கப்பட்ட துண்டங்களாய்
வந்து விழுகின்றன
தாய்மாரை இழந்த குழந்தைகள்.
மழை மூழ்கடித்த இரவில்
கடும் சமரில்
யாரும் அறியாது இருளைப் பெய்தபடி
நிலவு பதுங்குகுழியில் வந்து ஒளிந்திருந்தது.

ஒளியிழந்து கொடியில் அடிபட்டு
வீழ்ந்து போகிறது சூரியன்.
இருள் பெரு வெள்ளமென வந்து
பதுங்குகுழிகளைக் குடித்துப் பசியாறின.
மண்ணைக் கிளறி உழுது
எச்சரிக்கைகள் விதைக்கப்பட்டன.

உலகின் சபையில் யுத்தம் பேராதரவைப் பெறுகிறபோது
பதுங்குகுழியில் ஒளிந்திருந்த வெளி
கனவின் சுடலையாகிய
தரையிலிருந்து எழுந்து போகிறது.
எங்களுடன் நிலவும் பயங்கரவெளியில்
தோய்ந்தபடி அலைந்து கொண்டிருக்கிறது.

**29.05.2009**

## வெளிக்கு நகரும் மரங்கள்

எந்த மரங்களும் எனது கையிலில்லை.
நிழலுக்கான அதிகாரங்கள்
பறிபோன நிலையில்
தோப்பைவிட்டு
நான் துரத்தப்பட்டுவிட்டேன்.
எனினும் அந்த மரங்களிலேயே
எனது இருப்பும் ஆவலும்
மொய்த்துக்கொண்டிருக்கின்றது.

நான் எதுவும் செய்யாதிருந்தேன்
நிழலில்லாத வெம்மை வெளிகளில்
காலைப் புதைத்தபடி நிற்கிறேன்.

தூரத்திலிருந்து தோப்பைப் பார்த்து
மனதாறிவிட்டோ நிழலை ரசித்துவிட்டோ
வாழமுடியாதிருக்கிறது.
ஒவ்வொரு இரவிலும் ஒவ்வொரு மரமாக
குறைந்துகொண்டு வருகிறது.

எனது மரங்களின் உயிர் குடிக்கப்பட்டு
கட்டைகளாகத் தகனம் செய்யப்படுகின்றன.
நான் எந்த மரங்களையும் நாட்டாதவன்
எந்த மரங்களுக்கும் நீர் ஊற்றாதவன்.

எனக்காக வழங்கப்பட்ட மரங்களே
பறிபோய் அழிகிறபொழுது
கோடரிகளைத் தடுக்க இயலாதவன்.
அப்படியாயின் எனக்கு
வெம்மை தானே பரிசளிக்கப்படும்.
நிழல் தீர்ந்த எரிந்த காட்டின்
தணலில்தான் நடக்கவிடப்படுவேன்.

நாளைக்கு எனது பிள்ளைகள்
நிழலுக்காகத் துடிக்கிறபொழுது
நான் எந்தத் தோப்பின் வாசலில் நிற்பேன்
யாரிடம் நிழலுக்குக் கையேந்துவேன்.

என்னால் அவர்கள் அலையப்போகிறார்கள்
அவர்களின் தலை நிழல் இன்றி கருகுகிற பொழுது
இந்த வெம்மையையா வைத்து
குடை பிடிக்கப்போகிறேன்?

கோடரிகளை மீறி
என்னைக் கடந்து
மரங்கள் வெளிக்கு நகர்கின்றன.

## என்னைத் தொடருகிற மேலுமொரு இரவு

குற்றம் சாட்டப்பட்டிருக்கிற இரவு
என்னை வெளியில் விடுகிறது.
பாதியில் திரும்பி விடுகிற தெருவில்
என்னை யாரோ தேடிவர
குறையில் கீழே போட்டு நசித்த
சிகரட்டை மீட்டுச் செல்கிறார்கள்.

பயங்கரம் மிகுந்த இரவில்
நான் போர்த்தியிருக்கிற
போர்வையின் வெளியில்
யாரோ உலாவித் திரிகிறார்கள்.

அறைக்கு மேலாய்ப் பறக்கிற
ஹெலிகொப்டர்
கனவில் புகுந்து
ஒரு குடியிருப்பைத் தாக்குகிறது
தூக்கம் போராகிவிட
பகலை துப்பாக்கி தேடித்திரிகிறது.

தடைசெய்யப்பட்ட சொற்களை
எழுதத் தொடங்கிய மேசையில் அதனுடன்
பேனையும் தாளும்
என்னை விட்டு விலகுகின்றன.

இரவு ஒரு முகமூடியை அணிந்து மிரட்ட
அதனிடையில்
கறுத்தத் துணியால் மூடிய மோட்டார் சைக்கிள்கள்
சுற்றிக் கொண்டிருக்கின்றன.
தெருக்கள் சுருங்கிப்போயின.
குறை சிகரட்டோடு வருகிற
கடிதத்தில் சவப்பெட்டி வரையப்பட்டிருந்தது
புத்தக மேசை கடலில் குதித்துவிடுகிறது
மரணம் பற்றி வழங்கப்பட்ட
தீர்வை குறித்து
என்னால் எதையும் கூறமுடியவில்லை.

கதவு பயத்துடனிருந்தது
பயம் விளைவித்த சொற்களை
துப்பாக்கி பயமுறுத்தியது.
சொற்களால் எல்லாவற்றையும்
கடக்க முடிகின்றன.

இலக்கங்கள் அச்சுறுத்துகிற
தொலைபேசியில்
நான் தொடர்ந்து பேசுகிறேன்.
துப்பாக்கி அதிகாரம் சிரிக்கிற சத்தத்தில்
வழமையாக
விலகிச் செல்கிற தெருவில்
தவறவிடப்பட்டவனைப் போலிருக்க
இந்தச் சொற்களுடன்
மேலுமொரு பகல் முடிந்து போகிறது.

தெருவில் சொற்கள் தனித்திருக்கின்றன
இறந்த பகலை மேலுமொரு இரவு தொடருகிறது.

# திருப்பாற்கடலில் மூழ்கிய ஆழ்வார்

சுற்றிவளைக்கப்பட்ட கோயில் வேலிகளுக்கும்
கோயிலுக்குமிடையில்
திரிகிற கிழவனின் புலம்பலும்
பஜனையோடு சேர்ந்து ஒலித்தெழுகிறது.

தீச்சட்டிகளை நீ சுமந்தபடி வருகிறாய்
தீயினை மிதித்தெழுந்து செல்கையில்
உள்வீதிகள் எரிந்து கருகின
உனது தலையில் எரிகிற தீ முகத்தில் வழிகிறது.

சிலுவையைப்போல மிகவும் பாரமான
காவடியைச் சுமந்தபடி நான் வந்து சேர்ந்தேன்.
சிறகு உடைக்கப்பட்டவன்
பறவைக்காவடியில் தொங்குகிறான்
இந்த வருடமும்
ஆழ்வார் கோயிலைவிட்டு வெளியில் வந்தார்.

திருப்பாற்கடலை
படைகள் சூழ்ந்து கொண்டன.
அவதாரங்களின் தோல்வியுடன்
அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டும்
ஆழ்வாரைச் சுமந்து சென்றனர்.

கதைகளில் எழுதப்பட்ட அசுரர்கள்
ஆழ்வாரை சோதனையிடக் கீழே இறக்கினர்
அழிக்கப்பட்டதாய்க் கூறப்பட்ட
அசுரர்கள் சப்பாத்துக்களுடன்
துப்பாக்கிகளால் குறிபார்த்தபடி
திருப்பாற்கடலில் நின்றனர்.

அவதாரங்கள் முடிந்துபோக
இறுகி சிலையாகிய ஆழ்வாரை
அந்தக் கிழவன் ஏசியபடி கும்பிடுகிறான்
கிழவன் திருப்பாற்கடலில்
தீர்த்தமாடுகிற ஆழ்வாரைப் பார்ப்பதற்காய்
கெஞ்சித் தோற்றுப்போகையில்
ஆழ்வார் திருப்பாற்கடலை அண்மித்தார்.

திருப்பாற்கடல் குருதியால் நிரம்பியிருந்தது.
உன்னைக் காணவில்லை.
நீ சுமந்த தீச்சட்டியின் நெருப்புக்கட்டிகள் கிடந்தன.
எனது காவடி
ஒரு மரத்தின்கீழ் தனியே கிடந்தது.

ஆழ்வார் கோயிலுக்குத் திரும்பவில்லை.
கிழவனும் ஆழ்வாருக்காய் காத்திருக்கவில்லை.

**14.10.2008.**

யாழ்ப்பாணம் புலோலி வல்லிபுரம் ஆழ்வார்கோயிலில் தீர்த்தத் திருவிழா இராணுவத்தின் கடுமையான கட்டுப்பாடுகளின் மத்தியில் நடைபெற்றது. கோயிலிலிருந்து 3 மைல் தூரத்தில் நாகர்கோவில் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

## காலம் கனத்திருக்கிற சொற்கள்

உனது சொற்களும் அம்மாவின் ஏக்கமும்
என்னை மொய்த்துக்கொண்டிருக்கின்றன.
திறவுபடாத கதவின் கீழாய்
கனவு கரைந்து வெளியே போகிறது.
பிடித்து வைத்திருக்கிறது கதிரை.

இன்னும் இன்னும் விரிந்துகொண்டேயிருக்கிறது
துயரங்களின் நீட்சி கொண்ட வழி.
இந்த சிறை உடைந்து வெளித்தெரியாத
சூரியன் பற்றிய
ஆசையைத் துறந்துவிடுவோம்.
சிறுவர்களற்ற பட்டங்களே
உன்னைத் தூக்கிச் செல்லுவதாகக் கனவுற்று
அச்சமடைந்திருக்கிறேன்.
பூக்களிலிருந்து ரவைகள் சிந்துகின்றன.

பொதிகளில் துக்கமும்
அடைத்து வைக்க முடியாத
பாரமும் நிரப்பி வைத்திருக்கிறாய்.
முட்கம்பிகளில் விடிந்து
தண்ணீர் டாங்கிகளில் முடிந்துபோகிறது பொழுது.
தொடங்காத பயணத்தில்
நான் மூலையில் தங்கியிருக்க
கம்பிகளின் ஊடே பார்த்துக் காத்திருக்கிறாய்.
வழிகள் இன்னும் மூடப்பட்டிருக்கின்றன.

நீ உள்ளேயும் நான் வெளியிலும்
அடைத்து வைக்கப்பட்டிருக்கிறோம்.
உசார் நிலையில் துவக்குகள் நிற்கின்றன.
போர்ப் பயிற்சிகள் நடக்கின்றன.
மதிலுக்குப் பக்கத்தில்
சாக்கில் பிணம் கட்டி எறியப்பட்டுள்ளது.

*யசூசியையும் பான்கீமூனையும்*
*கண்டு நீ உரையாடுகிறாய்.*
*அவர்கள் உன்னைப் பார்ப்பதற்காய் தினமும்*
*வந்து செல்லுகிறார்கள்.*
*புகைப்படத்தில் வழிகிறது அவர்களது துக்கம்.*

*காலம் உன்னிடம் பாரமான*
*சொற்களைத் தந்துவிட்டுக் கிடக்கிறது.*
*சொற்களில் நுழைய முடியாத துயரங்கள்*
*வெளியில் தள்ளுகின்றன.*
*அஞ்சல் ஒரு துடிக்கிற*
*பறவைபோல வந்து விழுகிறது.*

*எழுத முடியாத சொற்களுக்காகவும்*
*காணமுடியாதிருக்கிற ஏக்கத்திற்காகவும்*
*நான் புறப்படுகிறேன்.*
*இன்னும் இரவெனக் கிடக்கிறது தெரு.*
*காலத்தின் துயரம் வீங்கி முட்டி*
*கனத்துக் கிடக்கிறது உன் சொற்களில்.*

**08.06.2009**

*வலயம்:25,*
*இல:128,*
*இராமநாதன்முகாம்,*
*செட்டிக்குளம்,*
*வவுனியா.*
*23.05.2009.*

*அன்பும் பாசமும் நிறைந்த அருமை அண்ணா அறிவது. நாங்கள் இருவரும் நலமாக இருக்கிறோம். அது போல உனது நலத்துக்கும் யேசு துணை.*

*மேலும், நானும் அம்மாவும் செட்டிக்குளம் முகாமில் வசித்து வருகின்றோம். எங்கட உறவினர்கள் எல்லாம் எங்கள விட்டிட்டு வந்துவிட்டினம். நானும் அம்மாவும் தனியாக படாத துன்பம் எல்லாம் பட்டு வந்திருக்கிறம். இங்கு வெளியில் செல்ல முடியாத நிலையில் இருக்கிறம். யசோ அண்ணாவின் தம்பி தான் தொடர்பு எடுத்து சொன்னவர். எங்களுக்கு உங்கட சுகம் சொன்னவர். ஒரு உடமையாக வாக் ஒன்டைத்தான் கொண்டு வந்தனாங்கள். எல்லாம் விட்டுவிட்டு வந்திட்டம். வெளியபோய் வேண்டவும் ஏலாது.*

*அம்மாவுக்கு ஒரே துன்பம்தான். என்ன செய்யிறதண்ணா நான். அம்மா பாவம் அண்ணா. அம்மாவையும் என்னையும் ஒருக்கா வந்து பார். உன்னைப் பார்க்க ஆசையாக இருக்கண்ணா. உன்னைப் பற்றித்தான் அம்மாவுக்கு ஒரே யோசனை. சுபாகரன் அண்ணா வந்தவர். எங்கட முகாமுக்கு பக்கத்தில இருக்கிற அருணாசல முகாமில இருக்கிறார். காசு இரண்டாயிரம் தந்தவர்.*

*அதத்தான் வைச்சு சாப்பாட்டு சாமான் வேண்டுறம். மேலே உள்ள முகவரிக்கு கடிதம் அனுப்புங்கோ. மக்கள் வங்கியில கணக்கு புதுசா துறந்து தொலைபேசியில் நம்பர் சொல்லுறம். அந்த நம்பருக்கு காசு அனுப்பேலுமென்டா அனுப்புங்கோ. சுபாகரன் அண்ணா கதைக்கிறதெண்டு நம்பர் வேண்டினவர் கதைப்பார். நாங்கள் கதைக்க வசதி என்டா தொலைபேசி கதைப்பம்.*

*இப்படிக்கு*

*அம்மா, தங்கை.*

# அடிமைகள் நகரத்தின் தீபாவளி

இந்த அடிமைகளும்
ஒரு தீபாவளி கொண்டாடினர்.

வாகனங்கள் வீதியில்
இறங்க நடுங்கிக் கொண்டிருந்தன
ஒரு இராணுவ வண்டியின்
நீளத்தினுள் முழு வீதியும் அடங்கி
நசிந்துக் கிடந்தது.
நேற்றிரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டவர்களின்
துண்டுதுண்டு உடல்களும்
சனங்களோடு வீதியில் ஒதுங்கி நின்றன.

அடிக்கடி அடிமைகள் நகரத்தினுள்
கடல் நுழைந்து திரும்பியது.
வீட்டிலிருந்து சனங்களை
திறந்து வெளியில் விடுகிற
சாவிக் காலை கறுப்பாகிக் கிடந்தது
துண்டுதுண்டாய் வெட்டி எறியப்பட்டு
வீதியில் கிடந்தன குழந்தைகளின்
தீபாவளி உடைகள்.

அடிமைகள் நகரத்தில்
தீபாவளி ஒன்று நடந்ததுதான்.

வெடிகள் தீர்க்கப்பட்டன
ரவைகள் நிரம்பிய நகரத்தின் நடுவே
குருதிப்புள்ளடியிடப்பட்ட உடைகளை
வாங்கித் திரும்பினர் சனங்கள்
அடிவாங்கிப் போகிற சனங்களின்
முதுகில்கிடக்கின்றன பலகாரங்கள்.

வளைந்த சனங்களின் முதுகில்
பீரங்கியைப் பூட்டி விடுகிறான் படையினன்
இந்த அடிமைகள் குனிந்தபடி
தீபாவளி கொண்டாட அனுமதிக்கப்பட்டனர்.

## சில சொற்கள் குரல்கள் மற்றும் முகங்கள்

*கேட்க முடியாத செய்தியுடன்*
*பேசமுடியாத சொற்களும்*
*பார்க்க முடியாத முகங்களும்*
*பழைய வானொலிப்பெட்டியினுள்*
*கொட்டி வைக்கப்பட்டிருந்தன.*

*0*

*சொற்களை மறைத்து*
*வெளிவந்த பத்திரிகை*
*இடையில் கிழித்தெறியப்படுகிறது*
*பத்திரிகையின் மொழி ஊமையாக*
*கண்களற்றவர் வாசிக்கிறார்*
*ஊமைகளின் பத்திரிகை*
*வெளிவர மறுத்துவிடுகிறது*
*எடுத்துச்சென்றவரின் முகம்*
*பின் பக்கம் பதிந்திருக்க*
*வனங்கள் அழிந்த மணம்*
*முன்பக்கத்தில் பெருக்கெடுக்கிறது*
*பயங்கரக்கோடுகள் நிறைந்த*
*ஒரு பத்திரிகை*
*விடியமுடியாத காலையில்*
*வந்து எழுப்பிவிட்டு*
*வீடு துடிக்கிற செய்திகளை நிரப்பிவிடுகிறது.*

*00*

*பற்றறிகள் தடைசெய்யப்பட்ட*
*வானொலியின்*
*அன்ரனா உடைந்துவிட்டது*
*இருட்டு வாசிக்கும் செய்தியிலிருந்து*
*பேய்கள் வெளியேறுகின்றன*
*அலைவரிசைகள் குழம்பி வழிய*
*வானொலியின் கோபுரம்*

பிடுங்கி எறியப்படுகிறது
திடீரென நின்றுவிடுகிற செய்தியைக்
கேட்டுக்கொண்டிருக்க
குரல்கள் அடங்கிய வானொலி செத்துவிடுகிறது
பூட்டிவிட்ட வானொலியிலிருந்து
அவலக்குரல் ஒலித்தபடியிருக்கிறது.

*000*

குழந்தைகளின் நிகழ்ச்சியை
வெட்டிக் குழப்பி விடுகிறது
பற்கள் முளைத்த தொலைக்காட்சி
பேய்கள் இருந்து பேசுகின்றன
வனங்களைத் தின்று மண்ணைப் பிளந்து
போகும் நடனங்களை காண்பிக்கின்றன
அழும் முகங்களைக் காய்ச்சி
கூழ் குடிக்கும் நிகழ்வுகளை ஒளிபரப்பின
அழிவின் உக்கிரம் கொண்டு
மிரட்டுகிறது விளம்பரம்
தலைகளை செய்தி கணக்கெடுக்கிறது
வனங்களை அழிப்பதை
நேரடியாக ஒளிபரப்புகிறது
இரத்தம் தொடர்ந்து வடிகிற
தொலைக்காட்சி சின்னத்திற்குக் கீழாய்
அழும் குழந்தையின் முகம் தொங்குகிறது
அலைவரிசைகளைப் பிடித்து
தின்று ஏப்பமிடுகிற
ஒரேஒரு தொலைக்காட்சியின்
முன்னால்
ஒரு கிழவன் கொலைசெய்யப்படுகிறான்
கண்களைப் பிடுங்கி விட்டு
மிக நீண்டு செல்கிற இரவென்றில்
பிசாசுகளின் கதைகளை ஒளிபரப்பி மிரட்ட
வெளிவருகிற பயங்கரம் வீட்டை நிரப்புகிறது.

*0000*

மிகவும் அவசரமாக வெளியிடப்பட்ட
தணிக்கையூட்டிய செய்திகள்
பிரதியெடுக்கப்படுகின்றன
பேய்முகம் பரப்புகிற இணையதளத்திடமிருந்து

முகம் இழந்த கிராமத்தின்
குருதி வடியும் படங்களை அவசரமாகப்
பதிவேற்றுகிறது
எழுத்துக்களை விழுங்கி
விசைப்பலகைகளில் முட்கள் முளைத்திருக்க
தொடர்பை இழந்து துண்டிக்கப்பட்டு விடுகிற
தனியாள் தளங்கள் துடித்துக் கொண்டிருக்க
முன்னுக்கு வந்து நிற்கிறது பாதுகாப்பு இணையதளம்
அழிவுக்கான செய்திகளை அச்சேற்றிவிட்டு
மறுமொழிகளின் முன்பாகத் துப்பாக்கியை நீட்டுகிறது
சிரிக்கும் குழந்தையின் முகம் விரிந்த தளத்தை
மெல்ல தின்று விட்டு
தொப்பியை அணிந்து
தலையைக் குனிந்திருக்கிறது

*00000*

கேட்க முடியாத செய்தியுடன்
பேசமுடியாத சொற்களும்
பார்க்க முடியாத முகங்களும்
பழைய வானொலிப்பெட்டியினுள்
கொட்டி வைக்கப்பட்டிருந்தன.

**07.11.2008**

# சொற்கள் பற்றி எரிந்துருகிய முகம்

*தீயின் கிணறுகள் வெடித்து விரிகிற*
*நகரங்களில்*
*உன்னைப் பற்றியெரிந்து விடிந்த*
*காலையில் உனது*
*கனதியான சொற்கள் தீப்பிடித்தன.*

*அணையாத பெருந்தீயில் எரிந்துருகியபோது*
*நமது தலையின் தீ கனக்கிறது.*
*வழிகள் அடைபட்டு வீடுகளைத் தீ வைத்து*
*வருகிற படைகளிடம்*
*இனத்தின் வேர் கருகுவதற்கான*
*தீ எரிக்கிற கோப்பையில்*
*நமது சொற்கள் போடப்படுகின்றன.*

*உயிர் வளர்த்த சொற்களினை*
*தேடுகிற உனது கடைசிச் சொற்கள்*
*எண்ணையில் மிதக்கிறது.*

*கதிரைகளைக் கிழித்தெறிந்த காலையின்*
*தீயில் சூரியன் வேகிட*
*வானம் வாடிப்போயிற்று.*
*தீயெழுதுகிற கவிதையின் சொற்கள்*
*பற்றி உயிர் எரிகிறது.*

*இன்னும் அணையாமல் பரவுகிற*
*தீயில் உனது சொற்கள் பிரகாசிக்க*
*தீயைக் கருக்கும் உயிரின் வாசம் பெருகுகிறது.*

*மண்ணைத் தின்னுகிற கால்களின்*
*அடியை உனது நினைவுத் தீயெரிக்கிறது.*
*உனதுறவுகள் புதைகிற மண்ணில்*
*எரிபடுகிற சாம்பலில் பெரும் கற்களென*
*உனது உயிரும் சொற்களும்*
*அனல் கொண்டு வருகிறது.*

*எரிந்து கருகிய முகத்தினைத் தேடுகின்றன*
*நமது சனங்களின் தீக்கிடங்குகள்.*

தமிழகத்தில் பத்திரிகையாளரான முத்துக்குமரன் தீக்குளித்து சாவடைந்தார்.

# மிதந்து திரியும் திறப்புகள்

சில சைக்கிள்களின்
கான்டிலை கழற்றி எடுத்தார்கள்
சில சைக்கிள்களின்
சீற்றை கழற்றி எடுத்தார்கள்
சில சைக்கிள்களின்
கரியலை கழற்றி எடுத்தார்கள்.

சைக்கிள்களின் சொந்தக்காரர்கள்
திரும்புவார்கள் என்ற நம்பிக்கை
யாரிடமுமில்லை.
சில பேர் சைக்கிளையே
திருடிக்கொண்டு போனார்கள்.

அலுமாரிகளை உடைத்து
புதையலை கண்டெடுப்பதுபோல
எனது தோழர்கள் மகிழ்கிறார்கள்
அவர்களின் வாசனை செண்டுகளும்
பவுடரும் சீப்புகளும்
இன்னும் வாசனையுடனிருந்தன.

உடுப்புகளைக் கழற்றி
அறையில் எறிந்து விட்டனர்
சிலர் அந்த உடுப்புகளால்
அறையின் தூசியை
தட்டிக்கொண்டார்கள்
கடைசியில் குப்பைத்தொட்டியில்
நிரம்பியிருந்தன அந்த உடைகள்.
அடிப்பகுதி கழன்ற சப்பாத்துக்களும்
உருக்குலைந்த செருப்புகளும்
அறையை விட்டு ஒதுங்கியபடியிருந்தன.

பாடக்குறிப்புகள் கிழிந்தும்
உருக்குலைந்தும் அள்ளி வீசப்பட்டும்
காற்றோடும் கால்களோடும் மிதிபட்டும்
குப்பையாகி கரைந்தன.

அவர்கள் எழுதிய பாடக்குறிப்புகளும்
சேகரித்த பத்திரிகைப் பகுதிகளும்
அடிமட்டங்களும் மை இறுகிய பேனாக்களும்
சிப்புகள் அறுந்த தோள்பைகளை விட்டு
தூரக்கிடக்க
அலுமாரிகளை விட்டு தூரக்கிடந்தன
அந்த தூசி படிந்த தோள்பைகள்.

அறைகளின் மூலைகள் பக்கங்கள் எங்கும்
கிடந்து உருண்டன
அவர்களிடமிருந்து உதிர்ந்த முடிகள்
தலையணைகள்
வேலி ஓரமாய் எறிந்து கிடந்தன.

குளியலறை தட்டுகளில் கிடந்தன
ஈரம் உலராத சவர்க்காரங்கள்
மலஅறையில் வெண்கட்டியால் எழுதப்பட்ட
தூஷணங்கள் தண்ணீரால் கழுவி
அழிக்கப்பட்டிருந்தது.

முகம் அழியாத கண்ணாடியுடன்
பெயரும் ஊரும் வகுப்பும்
எழுதப்பட்ட சுவர்களுக்கு
வெளுறிய வண்ணம் பூசப்பட்டிருந்தது.

அவர்களின் பொருட்களில் ஏக்கம் வழிகிறது
பெரும் ஆறாய் யாரும் கண்டுகொள்ளாத
கரைகளை எடுத்து உடைத்தபடி..
அவர்கள் புதிய சைக்கிள்களோடும்
புதிய பைகளோடும் திரும்பி வருவார்கள்
என்ற நம்பிக்கை யாருக்குமில்லை.

சிதறுப்பட்டு கலைந்து மிதக்கிற
அவர்களின் கனவின் ஏக்கங்களைப்போல
சைக்கிள்களினதும் அறைகளினதும்
துருப்பிடித்த திறப்புகள்
எங்கும் அலைந்து மிதந்து கொண்டிருந்தன.

## திரும்ப முடியாத நகரம்

என் நகரத்தின் கடைசித் தருணம்
அதுவென நினைத்திருக்கவில்லை.
உன்னை முத்தமிடுகிறபோது
அது கடைசி முத்தமெனவும் நினைத்திருக்கவில்லை.
போருக்கான வார்த்தைகள்
எழுதப்பட்ட நகரத்தில் உன்னை
தனியே விட்டு வந்தேன்.

எப்படி பிரிந்து போயிற்று என் தெரு?
இழப்பின் கொடுமையை
நீதான் முழுமையாகச் சுமந்திருந்தாய்.
நான் உன்னை இழந்து
தனிப் பறவையாய் வீசப்பட்டேன்.

நமக்கு மேலால் நின்ற நாவல் மரம்
முறிந்து போனதை
நீ எனக்குச் சொல்லாமலே விட்டிருந்தாய்.
நிழலற்றுத் திரிகிறதை
நான் காணமுடியவில்லை.
நாம் நாவல் மரத்தை இழந்திருக்க
அது வௌவால்களை இழந்துபோயிற்று.

விமானங்கள் வீடுகளைக்
கவ்விக்கொண்டு போகிறதாக
நான் கனவு கண்டெழும்புகையில்
நீ நமது நகரத்தில் இருந்து
துரத்தப்பட்டாய்.
காலையென்பது இழப்புடன்
தொடர்ந்து விடிகிறது.

எனது பேருந்து திரும்பவில்லை.
காத்திருப்பில் நீ அலைகிற துயர்மிகு
தெருக்களில் நான் திரும்பவில்லை.
போர் உன்னை
என்னிடமிருந்து பிரித்துவிட்டது
யாரிடம் நான் சொல்ல.

உன்னை ஷெல் தின்றுவிட்டது.
ஆயுதங்கள் மேலும் குவிக்கப்படுகையில்
போர் தொடரப்படுகிறபோது
வரைபடங்கள் மேலும்
அவதானிக்கப்படுகிறபோது
நம்மைக் குறித்து என்ன இருக்கிறது?

உன்னிடமும்
நமது காதல் நகரத்திடமும்
நான் திரும்பப்போவதில்லை.
திரும்பாத நகரத்தை
நாம் இழந்துவிட
நகரம் நம்மை இழந்திருக்கிறது.
நகரமிட்ட முத்தம்
இன்னும் காயாமலிருக்கிறது.

# ஆட்களை இழந்த வெளி

வானம்
நேற்றுக் காலைவரை உறைந்திருந்தது.
இப்பொழுது சிதறி
கொட்டிக்கொண்டிருக்கிறது.
வானம் அழுகிறதென யாரோ
சொல்லிக்கொண்டு போகிறார்கள்.
இப்பொழுதுவரை எந்தத் தகவலும் இல்லை.
சனம்
தகர்ந்து அடங்கிப்போயிருக்கிறது.
குடி எரிந்து முடிகிறது.

ஹெலிகொப்டர்கள் அலைந்து
கூடாரங்களின் சிதைவுகளைப் படம் பிடிக்கிறது.
எரிந்த வாகனங்களை
மீட்டுக் கொண்டு போகிறது ஐ.நா.
எல்லாம் நசிந்துபோக
அடங்கிக் கிடக்கிறது
ஆட்களை இழந்த வெளி.

கைப்பற்றப்பட்டவர்களாக்கி குழந்தைகளை
தொலைக்காட்சிகள் நாள் முழுவதும்
தின்று கொண்டிருக்கின்றன.
நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

நந்திக்கடலில்
பறவை விழுந்து மிதக்கிறது.
பறவைதான் சனங்களைத் தின்றது
என்றன படைகள்.
நந்திக்கடல்
உனது கழுத்தை நனைத்து
அழைத்துக்கொண்டு போயிருக்கிறது

உடைந்த ஆட்கள்
குழிகளில் நிரப்பப்பட்டனர்.
ஆட்களற்ற வெளி கரைந்து உருகுகிறது
மாடு காகத்தைச் சுமந்து
வீழ்ந்து கிடக்கிறது.
அந்தச் சிறு கூடுகள் நிலத்தைப்
பிரிந்து சிதறின.

இப்பொழுதுவரை எந்தத் தகவலும் இல்லை.
பெரு மழை பெய்கிறது
எனினும் நந்திக்கடல் காய்ந்து போகிறது.

வானம் உருகிக்கொட்டியபடியிருக்க
மிருகம் ஒன்று
சூரியனை தின்றுகொண்டிருக்கிறது
யாருமற்ற நிலத்தில்
தப்பிய ஒற்றை ஆட்காட்டிப் பறவை கத்துகிறது.

**18.05.2009**

## புகைப்படங்களுக்கான எதிரியின் கருணை

தஞ்சம் தவறுப்பட்டு விழுந்த கிராமத்தின்
சனங்களை காருண்யத்தின் கீழ் கொண்டுவருதற்காக
குரூரம் குண்டுகளைக் கொண்டு அழைக்கிறது.

சுற்றி வளைக்கப்பட்ட மக்களின்
முகங்களில் சோறுகள் வரைகிற காட்சிகளை
சிங்களத் தொலைக்காட்சி ஒளிபரப்புகிறது.
சோறுகள் தடுக்கப்பட்டிருந்த
நாட்களில் இருந்த வீடுகள் பறிபோக
எதிரி எல்லாவற்றையும்
பறித்துக்கொண்டு தானம் செய்கிறான்.

சிங்களத் தொலைக்காட்சியின்
மூலையில் இருக்கிற மயில்
எதிரியால் வாழ்வழிக்கப்பட்ட
யாருமற்ற நமது கிராமத்தில் ஆடுகிறது.

மிகவும் அழகிய உடைகளில் வந்து
அன்பான வார்த்தைகளினை
பலிகளின் தலைவன் பேசுகிறபோது
அவனது பலிக்கான அன்புச் சிரிப்பு பதிந்த
எறிகணைகள் வந்து
பசியின் சோற்றுப் பானைக்குள் விழுகின்றன.

நேற்று சில குழந்தைகளை அழைத்து
முத்தமிட்டு இனிப்புக்களை வழங்குகிறபோது
தண்ணீர் இன்றி நமது குழந்தைகள் புதர்களில் கருகின.
கைகளை நீட்டி
ஒளியிடுகிற திசை என்று காட்டிய போது
நமது திசைகளில் இருள் குவியத்தொடங்கின.

இனவாத பெட்டிகளின் வழியே
தமிழில் பேசியபோது நமது வாய்மொழி
கொடு நெருப்பில் அகப்பட்டு துடித்துத் தவிக்கிறது.
தமிழ் ஆடைகளை உடுத்து நடக்கிறபோது
நமதாடைகளை இழக்க எல்லாம் கிழிந்து போகிறது.

ஒவ்வொரு நாளும் இராணுவச்சொற்களை
வந்து பேசிவிட்டுத் தூங்குகிறபோது
நாமொரு பயங்கர இரவில்
அவரால் சுடப்பட்டுக் கொண்டிருந்தோம்.
வித்தியாசங்களை மறைத்து பேசுகிறபோது
நமது முகம் கழருகிறது.

மண்பசி வெளிப்படுகிற கோணங்களுடைய
புகைப்படங்களின் புன்னகையில்
நமது கிராமம் வாடுகிறது.
தொலைக்காட்சியின் கனிவுக்குரலில்
ஒரு போர் வெறியின் தொடக்கம் இருந்தது.
ஆச்சரியங்களை
ஏற்படுத்தாத வகையில் அவன் புன்னகைக்கிறபோது
நிலமெங்கும் அழுகை பரவுகிறது.

பலியிடப்படுகிற கிடங்கில் அடைத்துக்கொள்ள
அழைக்கிற எதிரியின் தலைவன்
நேற்றிரவு ஏழுமணிச் செய்தியில் உதிர்த்த
பெரும் புன்னகையில்
அறுபது சனங்கள் சிதறிப்போயினர்.

எனினும் எதிரியின் காருண்யத்தின் அழைப்பும்
ஐக்கியத்தின் சொற்களும்
வெளித்தோற்றத்தில்
புத்தரின் மௌனத்தைத் தோய்த்து அமைதியே
குணம் எனக் கொண்டிருந்தது.

பலிகளின் தலைவன் நமது மடிகளில்
ஒளிந்திருந்த குழந்தைகளைப் பறித்து
தருமத்தையும் புன்னகைகளையும்
தயார் செய்து கொண்டு
சோறூட்டி புகைப்படம் பிடிக்கிறான்.
எல்லோருடைய வயிற்றிலும்
என்றைக்குமான பெரும் பாவம் நிறைகிறது.

**16.01.2009**

## பந்துகள் கொட்டுகிற காணி

மைதானத்துக்கான சமர்
ஓய்ந்துபோக மீளவும் தொடங்குகிறது
தீராத பேரினநோயின் யுத்தம்.
கூடாரத்தில் அடைந்துவிட
தாடி வளர்ந்து
உன்னை மூடிக்கொண்டிருக்கிறது.
உயிர்கள் கருகிய மைதானத்தை
நனைக்கிறது இறுகிய மழை.
வாழ்வு
கூடாரத்தில் மூடிவைக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதமாக வேர் அறுக்கப்பட்ட
பெருமிதங்களால்
வாழ்த்துக்களால் வெற்றியின் களிப்பில்
மிதந்துகொண்டிருக்கிற கொண்டாட்டங்களில்
நாம் எல்லாவற்றையும்
இழந்து போயிருக்கிறோம்.
இலக்கங்களாலும் ஒலிபெருக்கிகளாலும்
நீ கட்டி வைக்கப்பட்டிருக்கிறாய்.

என்னை அழைத்துச் செல்லுகிறபோது
முழு மரங்களும் பக்கத்தில் உதிர்ந்ததுபோல
அதிருகிறது உனது முகம்.
பான்கீமூனின் கைகளில் துவக்கு இருப்பதை
நீயும் நானுமே காணுகிறோம்.
இன்னும்
அடங்காமல் பசித்திருக்கிற துவக்குகளால்
சூழப்பட்டிருக்கிறது நமது காணி.

மண்ணடியில் நமது சிதைந்த வேரில்
திணிக்கப்படுகிற சொல்லாடல்களில்
நாம்தான் உண்மையில் தோற்றிருக்கிறோம்.
மைதானத்தைவிட்டு
வெளியேறிக்கொண்டிருக்கிறது யுத்தம்.

நாராயணனின் கைகளிலும்
மேனனின் கைகளிலும்
பந்துகள் உருளுகின்றன.
பந்துகள் கொட்ட
தலைகள் சிதறுகிற காணிக்கிராமங்களில்
அரிசி மூடைகளும் வந்து விழுகின்றன.

இனி கனவுகள் குறித்து மிக மௌனமாயிருப்போம்.
இரப்பர் கூடாரங்களால் நிரம்பியிருக்கிற
காணியில் முட்கம்பிகளில்
தொங்கிக்கொண்டிருக்கிறது போரின் பிறகான வாழ்வு.

நம்மை வென்றுவிட்டு கிடக்கிற யுத்தம்
அறிவிப்பின்றி மெல்லத் தொடருகிறது.
மனங்கள் காயப்படுத்தப்பட
தலைகள் கழற்றப்படுகின்றன.
நமது மைதானத்தில்
பந்தாடிக்கொண்டிருக்கிறது உலகம்.
குடிக்கிற தண்ணீருக்கான வரிசை நீளுகிறது.

**21.05.2009**

## குழந்தைகள் தோற்கடிக்கப்படுகிற சமாதானத்தின் நிழல்

*போர் தின்ற நகரத்தை*
*சமாதானத்தின் கடதாசி கட்டி எழுப்புகிறது.*
*பூக்களும் பறவைகளும்*
*நிலத்திலிருந்து பிடுங்கி எறியப்பட்டிருந்த நாளில்*
*வெள்ளைவீதி திறந்திருக்கிறது.*
*எல்லோருடைய கண்களிலும் போர் நிரம்பியிருக்க*
*கவிழ்ந்த கைகள்*
*நமது நகரத்தில் உலவித்திரிகின்றன.*

*சூழ்ச்சிகளால் வடிவமைக்கப்பட்ட*
*சொற்களை*
*மாறிமாறிப் பேசிக்கொண்டிருந்த*
*வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காலத்தில்*
*சிமெண்ட் சுவர் வளர்ந்து*
*மனதை மூடிக்கொண்டிருக்கிறது.*
*காலங்களின் ஒளியை*
*முழுவதுமாய் சுறண்டி எடுத்திருக்க*
*பொலித்தீன் பைகளில்*
*அலையும் கனவு அடைத்துக் கட்டப்படுகிறது.*

*தோற்றுத் தோல்வியின் துயல்*
*முடிந்து விடுகிறது நிலத்தின் அடங்காத வாசனை.*
*எல்லோரும் பேசிவிட்டுப் போன பிறகு*
*கதிரைகள் வெடித்துச் சிதற*
*ஏங்கிக்கொண்டிருந்தன சொற்கள்.*

போரைக் கொண்டாடிக்கொண்டிருக்கிற
சமாதானத்தின் கீழ்
பயங்கரம் நிரம்பியிருந்ததைக்
குழந்தைகள் கண்டனர்.
எல்லோரையும் மூடிக்கொண்டிருக்கிறது.
சமாதானத்தின் நிழல்.
குழந்தைகளின் கண்களை மெல்ல
சமாதானம் தின்கிறது.
மணல் நகரங்கள் எழும்பிக்கொண்டிருக்கிறது.

கிராமங்கள் புதைந்துபோக
முடிவற்ற பெயர்வு நிலத்தை வரைந்துகொண்டிருக்கிறது.
ஆற்றில் நகரத்தை அள்ளும்
படகு மிதக்கிறது.
முதலில் சொற்களின் ஒளி
மீள முடியாத சகதியில் ஒளித்து வைக்கப்பட்டிருக்க
காலம் தோற்கடிக்கப்பட்ட
வானம் முழுவதும் இருள் பொழிகிறது.

சமாதானத்தின் நிழலில்
எரிந்து கருகுகிறது கடதாசி நகரம்.
குழந்தைகள் துப்பாக்கிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டு
கவச வாகனங்களில் நிரப்பப்படுகின்றனர்.
முன்னால் நிற்கின்றன
ஷெல்களை பொழியத் தயாராக இருக்கிற பீரங்கிகள்.

நம்பிக்கைகளை ஏமாற்றியபடி
எதிர்பார்ப்புக்களை சிதைத்தபடி
சொற்கள் போர் வளர்த்துக்கொண்டிருக்கின்றன.
காத்திருப்புக்களின்மீது
மிதிக்க வெடிக்கின்றன புதிய வெடிகள்.
குழந்தைகள்
எல்லாவற்றையும் கண்டு அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்.

வாசனையை உணர்ந்த கிழவன்
திண்ணையை மேய்ந்த பின்மாலைப்பொழுதில்
தோற்கடிக்கப்படுகிறான்.
காலத்தின்மீது
நஞ்சுக் கனிகள் காய்த்து முற்றுகின்றன.
துவக்குகள் ஆட்களைத்தேட
மரணம் அண்மையை சுலபப்படுத்துகிறது.
மரம் முழுவதும் பாம்புகள்
பூத்து அடர

குளத்தில் விஷம் நிரம்புகிறது.
ஆறுகளின்மீது
பெருமெடுப்பில் பாய்கிறது வீழ்ச்சியின் இலக்கு.

பீரங்கிகள் தயாராக இருக்கின்றன.
டாங்கிகள் புறப்படத் தொடங்குகின்றன.
துவக்குகள் நிமிர்ந்து நேராக நிற்கின்றன.

சொற்களைப் பிய்த்தெறிந்துவிட்டு
குண்டுகளை ஏற்றி வந்து இறக்குகின்றன
பயண விமானங்கள்.
வெள்ளைவீதிகளில் சமாதானம்
போரை வடிவமைக்கிறது.
குழந்தைகள் ஒழித்துக்கட்டப்பட்ட நகரத்தில்
அவர்கள் தோற்றதை
அறிவித்துக்கொண்டிருக்கிறது
சமாதானத்தின் கடதாசி.

## கைது செய்யப்பட்ட தாயின் சரணடைந்த குழந்தை

*நந்திக்கடலில் விழுந்திருந்தன*
*நிறைய முகங்கள்*
*சயனட் குப்பிகளில் குழந்தைகள்*
*பால் குடித்தனர்.*
*தாய்மார்கள் துவக்குகளை வைத்திருந்தபடி*
*குழந்தைகளைச் சுமந்து சென்றனர்.*

*முள்ளிவாய்க்காலின் கிடங்குகள்*
*எல்லாம் மூடுண்டு விடுகின்றன.*
*கிடங்குகளிலிருந்து எழும்பி வருகின்றனர்*
*பிணங்களும் அதன் குழந்தைகளும்.*

*கடல் வீழ்ந்துவிட மணல் பெயர்ந்து*
*கடலில் அள்ளுண்டு செல்லுகிறது.*
*முள்ளுக் கம்பிகள் வரவேற்கின்றன*
*ஒற்றை தேச முகங்களை அணிந்தபடி.*

*விடுவிக்கப்பட்ட பகுதி மரணத்தின்*
*குளிர் அறைகளாக மாறிவிட*
*சித்திரவதையின் பாடல்களில்*
*இரவு அதிர்ந்துகொண்டேயிருக்கிறது.*
*பெருநிலம் மயானமாக மாற*
*அகதிமுகாம்கள் நெருங்குகின்றன.*

*தாய் கைது செய்யப்பட்டிருந்தாள்.*
*குழந்தை சரணடைந்திருந்தது.*
*துப்பாக்கி இருவருக்கும் நடுவில்*
*நின்று கொண்டிருக்கிறது.*
*முட்கம்பி ஆடையாகப் படர்கிறது.*
*நந்திக்கடலின் பிணங்கள்*
*ஒதுங்கி முடிகின்றன.*
*ஈழத்தை இலங்கை விழுங்கி முடிக்கிறது.*

**17.05.2009**

## ஏ–9 வீதி 2009

*சனங்களின் வீதி பொறிகளுடன் கிடக்கிறது.*
*இணையமுடியாத வீதியின் ஒரு துண்டை*
*எங்களிடம் தந்துவிடுங்கள்.*
*கப்பலில் செல்லுகிற அனுமதிக்காய்*
*ஓடித்திரிந்து கொண்டிருக்கிறது மரண பயணம்.*
*வீதியின் பெயரால்*
*இழந்தவைகள் போதுமாயிருக்கின்றன.*
*திறபடத் திறபடத் தடுக்கப்பட்டு*
*மூடப்படுகிறது மண் தடுப்பு.*
*பனைகளை வீதிகள் இழக்க*
*நாம் காணிகளை இழந்தோம்.*
*பயணம் வீதியை இழந்து முடங்கியிருக்கிறது.*

*வீதியின் பெயரால் யுத்த நிறுத்தம் முறிந்து போக*
*பெரு யுத்தம் தொடங்கியது.*
*கால்களை இழந்து*
*பேரூந்துகள் தகர்ந்துவிட*
*முழு வீதியையும் எங்களிடமிருந்து பறித்தனர்.*
*ஒழுங்கைகளின் வாசலில்*
*அங்கலாய்த்தபடி நிற்கின்றன பேரூந்துகள்.*
*சனங்கள் நெடுவீதியை விட்டுத் துரத்தப்பட்டனர்.*

*உங்களையும் எங்களையும் இணைத்துவிடாத*
*வீதியை யுத்தத்தில் பலியிட்டிருக்கிறோம்.*
*எங்கள் கால்களின் கீழாய்*
*உங்கள் மொழியினை எழுதியிருக்கிறீர்கள்.*
*வீதியின் கதை முடிந்து போகிறது.*
*அறுபட்ட சொற்களை*
*இன்னும் இன்னும் புதைத்து வீதி செப்பனிடப்படுகிறது.*

நடைகள் 'மாறியிருக்கின்றன'.
வீதிக்காகக் காத்திருந்து கிளியின் கவிதையுடன்
காகம் கரைந்து கொண்டிருக்கிறது.
நகரங்களில் அளக்கப்பட்ட வீதி பற்றிய கனவுகளை
அவர்கள் மறந்து விட்டனர்.
எங்களிடம் சொற்களைத் திருடி
ஜனாதிபதி சிரிக்கிற புகைப்படத்துடன் ஒட்டப்பட்ட
வாழ்த்துச் சுவரொட்டிகளை
சனங்கள் போய் முடிந்த மாலையில்
அவர்கள் கிழித்துப் போட்டனர்.

எங்கள் வீதியும் பயணமும் எங்களிடமிருந்து
பறித்தெறியப்பட்டிருக்கின்றன.
இணையமுடியாத வீதியின் ஒரு துண்டையாவது
எங்களிடம் தந்து விடுங்கள்.
சனங்களை ஒதுங்கிவிடச் சொல்லி
விசில் அலறுகிறது பின்னிரவிலும்.
ஆயுதங்கள் நிரப்பப்பட்ட வாகனங்கள்
வேகமாக வந்து கொண்டிருக்கிற பேரிரைச்சலில்
நகரம் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

**18.05.2009**

## இல்லாதவர்களின் அளவற்ற கனவு

அவர்கள் பெருங்கனவுடனே
மரணத்தை முத்தமிட்டனர்.
கடைசியில்
அவர்களின் ஞாபகம் நிரப்பிவிடப்பட்ட
கல்லறைகளும் இல்லை.
தாய்மார்கள் தீப்பந்தங்களையும்
தமது பிள்ளைகளுடன் இழந்து விட்டனர்.
மனைவிமார்கள் தங்கள் புன்னகையுடன்
கல்லறைமீதான
தமது சொற்களையும் இழந்து விட்டனர்.

அளவற்ற ஞாபகத்தில் வானம் முட்டிக்கிடக்கிறது.
இம்முறை எந்தப்பூக்களும் இல்லை.
இலைகளில் குருதி ஒழுக
பூமரங்களின் வேர்கள் அறுக்கப்பட்டிருக்கின்றன.

தலைகளை மின்கம்பத்தில் மோதி
இல்லாதவர்களைக் கூப்பிடுகிறது நம்பிக்கையற்ற மனம்.
அவர்களை என்றோ அழித்துவிட்டனர்.
கனவை உறிஞ்சி
அவர்களைத் தின்று முடித்துவிட்டது காலம்.
அவர்கள் மீதெழுதப்பட்ட மரணப்பாடல்
நெருப்பில் கிடந்து பொசுங்குகிறது.

அப்பாவுக்காகத் தீப்பந்தம் ஏந்தி வருகிற குழந்தை
மண்ணைக் கிண்டி
கல்லறையைத் தேடிக்கொண்டிருக்கிறது.
ஞாபகத்தின் கடைசி சொத்தையும் அழித்தனர்.
அழுகையின் இருந்த
உரிமையையும் பறித்து எடுத்தனர்.
மனங்களில் கல்லறைகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

எங்கோ ஒரு மூலையில் கனவு எரிந்து
கொண்டிருக்கிறது.
யாருமற்ற தனித்த நிலத்தில்
வரலாற்றின் துயரம் நிரம்பிய எலும்புக்கூடுகள்
எழும்பிச் செல்லுகின்றன.
மண்ணைப் பிரட்டி
சுவர்களை ஆழத்தில் புதைக்கிறார்கள்.
கல்லறைகளின் போர் நடந்து முடிந்துவிட்டது.
சனங்களுடன் அவர்கள்
கல்லறைகளைத் துடைத்தெறிந்து விட்டார்கள்.

நம்பிக்கையின் உறைவிடத்தில்
சனங்களை இணைத்து வைத்திருந்த மண்ணில்
இப்பொழுதுதான் இனம் படுகொலை செய்யப்பட்ட
சுடலையின் வாசனை பெருமெடுப்பில் வீசுகிறது.

**22.06.2009**

# இருள் சூழ்ந்த கிழக்கு

சூரியனோடு கிழக்கை
சிங்கம் விழுங்கிவிட்டது.

முட்கம்பிகளாலும்
எச்சரிக்கை அறிவிப்புகளாலும்
இராணுவ நடமாட்டங்களாலும்
மீன்கள் இடம்பெயர்ந்தன
வாவிகள் தற்கொலை செய்துகொண்டன.

கிழக்கில்தான் சூரியன் உதிக்கும்
கிழக்கு சூரியனைப் பிரிந்து இருட்டாகிவிட்டது
மலைகளுக்கு இடையில்
அழிவுகள் கும்பியாயிருக்கின்றன.

தெருக்களெல்லாம் குருதி பிறண்ட கேக்துண்டுகள்
மனித சதைகளோடு கிடக்கின்றன
சிங்கத்தின் கோரப்பற்கள் பொறிக்கப்பட்ட
கேக்துண்டுகளில் முகாம்கள் எழும்பிவந்தன.

தலைகளற்ற மக்கள் நடுவில்
நீண்ட காலமாய் முகங்களை மறைத்த
சிங்கத்தின் கோரப்புன்னகையுடைய
பயங்கரக்கொடி பறந்தபடி இருக்கிறது
கொடியின் அசைவு சுவாசங்களை உலுப்பி
குழந்தைகளைத் தூக்கி எறிந்தது.

எந்த இடத்தில் நாம் மௌனமாயிருந்தோம்
எப்பொழுது அசையாதிருந்தோம்
குரல்கள் வெடிப்பதன் அவசியம்
'எங்கு ஒளிந்து கொண்டது'.
உதடுகள் தீப்பற்றி எரிகின்றன.

இங்கு நாங்கள் யாருமில்லை
இது நாம் வாழ்ந்த ஊரில்லை
நாம் மீண்டும் தேடுகிறோம்.
பொறிகளாக கேக்குகள் முளைக்கின்றன
இராணுவம் கேக்கை இனிக்கிறது
ஜனாதிபதி வந்து கொடியேற்றுகிறார்
தலைதுண்டிக்கப்பட்ட எங்களுக்கு
கேக்குகளால் செய்யப்பட்ட
சவப்பெட்டிகளை வழங்குகிறார்.

மாரடித்து அழும் ஓசையோடு
நாம் சூரியனைத் தேடுகிறோம்
மீன்கள் எங்குபோயின
மீன்களின் பாடல்கள் புழுதியில் வாடிக்கிடக்கின்றன.

குடும்பிமலையின் மௌனங்களை
அழுகைகளை மெல்லியதாக
சிங்கம் தின்றுகொண்டிருக்கிறது
சிங்கத்தின் வாயிலிருந்து
கொடூரம் கொட்டியபடி இருக்கிறது.

வாவிகளும் மீன்களும் திரும்புவதற்கு
வழிகளின்றி காடுகளுள் நுழைகின்றன.

இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளின் வசமிருந்த கிழக்கின் பகுதிகளை முற்றாகக் கைப்பற்றி 'கிழக்கின் உதயம்' என்ற வெற்றி விழாவை ஜூலை 12ல் நடத்தியது.

# சொற்கள் சிதைகிற மணல்

நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்
நீ பேசு.
சொற்களற்ற காட்டில்
துயர் பொழிந்து கொண்டிருப்பதை
பகிர முடியாதபடியால்
பாதியாய் சிதைந்து உடைகிற சொற்களை
நான் விழுங்குகிறேன்.
என்னை விடுத்து
உன்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டிரு.
காதுகளில் மணல் நிரம்புகிறது.

ஷெல்கள் வந்து விழுவதையும்
விமானங்கள் பறந்தலைவதையும்
துவக்குகளின் சத்தங்கள்
எங்கும் புகுந்து செல்வதையும்
தவிர
எந்த சத்தங்களுமற்றிருக்கிறது
உனது தொலைபேசி.
மணல் அணை எழும்புகிறது.

உயிரோடிருப்பதைத் தவிர
அங்கு எதுவுமில்லை.
உயிரும் பாதியாய் குறைந்துபோயிருக்க
சிதைகிற சொற்கள் ஒவ்வொன்றாய் வருகின்றன.
குண்டுகளால் சிதறியபடியிருக்கிற
உனது ஒரு இரு சொற்களைத் தவிர
நான் அடைந்தது ஒன்றுமில்லை.
மணல்தரை சூடாகிறது.

பாதியில் அறுந்துபோகிற உரையாடலில்
மீளவும் உன்னைக் குறித்தான
அச்சம் தொடங்குகிறது
நீ தொலைபேசியை வைத்ததிலிருந்து
நான் காத்திருக்கிறேன்
பெரும் சமரிற்குப்பிறகான
உனது சொற்களுக்கு.
மணல் கிடங்கு வாய் பிளக்கிறது.

எதுவரை எனது சொற்கள் சிதைய
விழுங்கிக்கொண்டிருப்பேன்
உன்னிடமிருந்து என்னை மறைத்தபடி?
தொலைபேசி கனத்துப் போய்க்கிடக்கிறது.
மணல் எழுந்து வீசுகிறது.

## முட்கம்பிகளில் படிகிற அடையாள இலக்கம்

ஒரு தனித்தீவில் உன்னைச்
சிறையிட்டிருக்கிறார்கள்.
முதுகில் குத்தப்பட்ட அடையாள இலக்கம்
முட்கம்பியில் படிந்து கிடக்கிறது.
மரங்களில் பொருத்தப்பட்டிருக்கும்
காவலரண்கள் என்னைக் கடந்து கொண்டிருக்கின்றன.
காற்று அலையும்
வெளிகளில் முடிவற்ற வெறுமை நிரம்புகிறது.

முட்கம்பிகளால் கட்டப்பட்ட வீட்டில்
கோழி செட்டையடித்துத் துடிதுடித்துக்கொண்டிருக்கிறது.
வானம் கரைந்து சோற்றுப் பானைக்குள் நிறைந்துவிட
பிள்ளைகளுக்காக வாழும்
நம்பிக்கையைக் கட்டியெழுப்புகிறாய்.
நீ அறிந்திராத தெருக்களைப் பற்றி
நான் எதுவும் பேசிக்கொண்டிருக்கப் போவதில்லை.
நேரம் வேகமாகக் கடந்து கொண்டிருக்கிறது.

பிள்ளைமீது முட்கம்பி ஆடையென
உடுக்கப்பட்டிருக்கிறது.
நான் வரும்போது பச்சை வயல்களில்
சித்திரவதையின்
பழைய கூக்குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன.
ஆண்குறிகளும் யோனிகளும்
கடல் நீரேரியில் 'மிதந்து கொண்டிருக்கின்றன'.
பெரிய பாலத்தைத்
தின்று மொய்க்கின்றன காவலரண்கள்.

இரவுக்கும் பகலுக்கும் இடையில்
கிடந்து நீ நசிபடுகிறாய்.

அடையாள அட்டை
எனது கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது.
நெடு நேரத்தின் பின்னர் வந்திருக்கிற
நிவாரண உணவில்
நவீன பொருளாதாரத்தைக் கணக்கிடுகிறாய்.
சுவர்களற்று
புழுதி நுழைகிற வீட்டில் காலனிய நகரங்கள்
வந்து படிந்துகொண்டிருக்கின்றன.

இன்னும் சொற்கள் இருக்கின்றன.
நீ எதையோ சொல்லாமல் போகிறாய்
நம்மைக் கொண்டு வந்து
குவித்து விட்டிருக்கிற குண்டுகள்
தீர்ந்த பெட்டிகளில் நிரப்பிவிடப்பட்டிருக்கின்றன
உனது சொற்கள்.
நீ எழுத முடியாதிருக்கிற கவிதையை
என்னிடம் வாசித்துவிட்டுப்போ.
பின்னால் சொற்கள் கொட்டிக் கொண்டிருக்கின்றன.

எனக்கான நேரம் முடிவடைகிறபோது
கோழிகள் செட்டையடிக்கிற சத்தம்
கேட்கத் தொடங்குகிறது.
இப்பொழுது உனது அடையாள
இலக்கத்தை நான் மீளவும் ஞாபகப்படுத்துகிறேன்

**14.5.2009**

# அபிராஜின் தங்கை லூர்த்தம்மாவின் கண்கள்

*01*

*லூர்த்தம்மாவின் கண்கள் பின்னிரவுகளில்*
*அலைந்து கொண்டிருந்தன.*
*அந்தத் துவக்கு மிகப் பாரமாக இருந்தது*
*என்கிறாள்*
*அபிராஜின் தங்கை லூர்த்தம்மா.*
*அவள் இழுத்துச் செல்லப்பட்டபோது*
*அபிராஜ் புதர் ஒன்றுக்குள் ஒளிந்திருந்தான்.*

*மீளவும் அவள் ஓடி வந்து*
*சருகுகளிற்குள் ஒளிந்துகொண்டாள்.*
*அப்பொழுது அவள் பார்த்துக்கொண்டிருக்க*
*அபிராஜ் இழுத்துச் செல்லப்பட்டான்.*
*கனவு ஒழுகி சருகுகள் ஈரமாக*
*லூர்த்தம்மா அழுதுகொண்டேயிருந்தாள்.*
*அபிராஜ் துவக்கின் சூட்டில் வாடிவிட*
*லூர்த்தம்மாவை தேடிக்கொண்டிருந்தான்.*
*களங்கள் எங்கும் குருதி வடிந்துகொண்டிருந்தது.*

*இனந்தெரியாத கால்களில் மோதுகிறபோது*
*அபிராஜை லூர்த்தம்மா கண்டாள்.*
*குழந்தைகள் சரணடைந்து*
*துவக்குகளைக் கையளித்தனர்*

*02*

*அவள் ஒதுங்கும் இடங்களில்*
*துவக்குகள் விழித்துக்கொண்டிருக்கின்றன.*
*லூர்த்தம்மாவுடன் விளையாடிக் கொண்டிருக்கும்*
*சிறுமிகளின் கைகளில் பாரமான இலக்கங்கள்*
*கட்டப்பட்டிருக்கின்றன.*
*மீள மீள அவள்*
*சரணடைந்து கொண்டிருக்கிறாள்.*

அபிராஜிடம் துப்பாக்கி கொடுக்கப்பட்டு
பரிசோதிக்கப்படுகிறது.
வந்திறங்கும் சிறுவர்களுக்காக
தயாரிக்கப்படும் இலக்கங்களை
அபிராஜ் எண்ணுகிறான்.
அபிராஜின் கால்கள் மடங்கிப்போகின்றன.

இப்போது லூர்த்தம்மாவின் கண்களை
இந்தத் துவக்குகள் காவலிட்டுக் கொண்டிருக்கின்றன.
பொம்மைக் கடைகளில்
துவக்குகள் தொங்கிக்கொண்டிருக்கிறதாய் வருகிற
கனவுகள் இருவரையும் இரவுகளில் அலைத்தன.

அபிராஜ் மீள மீள பரிசோதிக்கப்பட்டான்.
லூர்த்தம்மாவின் கண்களில்
சமரிரவுகளின் துப்பாக்கிகள் குத்திக்கொண்டிருந்தன.
துவக்குகள் லூர்த்தம்மாவையும்
அபிராஜையும் துரத்திக்கொண்டேயிருக்கின்றன.

லூர்த்தம்மாவின் குருதி கசிந்து வாடுகிற கண்கள்
அபிராஜின் முன் அலைந்துகொண்டிருந்தன.

விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகளான 15 வயதுச் சிறுமியுமான லூர்த்தம்மாவும் அவளின் அண்ணனான 16 வயதுடைய அபிராஜூம் இராணுவத்திடம் சரணடைந்து, கைதுசெய்யப்பட்டு அரசாங்கத்தின் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுடன் 90 சிறுவர்கள் இருப்பதாகவும் அவர்களில் 44 பேர் சிறுமியர்கள் எனவும் லூர்த்தம்மா ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தாள்.

## சொற்களற்றலைகிற நகரம்

மரணம் கொடுமுகத்துடன்
குழந்தைகளை விழுங்கி முடிக்கிறது.
ஒரு போராளியுடன்
சுற்றியிருந்த இருபது சனங்கள்
சுட்டு விழுத்தப்பட்டனர்.
இலக்கத்தில் மூழ்கியிருக்கிறது வீடு.

எண்ணிக்கையின் மாறாட்டங்களில்
மரணங்களைக் கொண்டாடி திடுக்குறுகிறவர்கள்
சொற்களற்றலையும் நகரத்தின்
வாடிய பூக்களைக் கண்டு ஏங்கினர்.

பத்திரிகையின் முகப்பில்
சொற்களில் கண்ணீர் நிறைந்திருந்தது
துவக்குகள் வாசித்து
பின் தொடருகிற பத்திரிகை நிறுவனத்தின்
வாசலில்
குருதியின் பெரு எச்சரிக்கை குவிந்திருந்தது.

சவப்பெட்டிகள் தயாராக இருக்க
பிணங்களைத் தொலைத்தழுகிற மிஞ்சிய ஒருவன்
அதற்குள் படுத்திருக்கிறான்.
எதுவும் பேச முடியாதிருக்கிறது நகரம்.

கொடிகளால் முற்றுகையிட்டிருக்கிற நகரமெங்கும்
வரையப்பட்டிருக்கிறது
சனங்களின் தோல்வியின் கடைசிப் பிரதேசம்.
குழந்தைகள்
தடைசெய்யப்பட்ட சீருடைகளை அணிந்தபடி
உதிர்ந்து கொண்டிருக்கிற
பிணங்களின் கீழ் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

சொற்களற்றலைந்த நகரம் கடைசியில்
சவப்பெட்டியினுள் ஒளிந்தலைய
குழந்தைகள் அவற்றைச் சுமந்தபடி
நகரமெங்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

**20.05.2009**

# வருடத்தைத் தொடருகிற போரின் பிரகடனம்

எல்லா வருடங்களும்
வெறும் இரவுகளைத்தான் உதிர்க்கின்றன.
நான் உன்னைச் சந்திக்காத
எதையும் பகிராத
கடந்த வருடத்தைப்போல
இந்த வருடம்
நடு இரவில் வந்து
என்னை எழுப்பக் காத்திருக்கிறது.

போர் நமது கிராமத்தை அழித்து
கனவை முடிவுறுத்துவதாய்
முன்பிரகடனம் செய்யப்பட்டிருக்கிற நாளில்
இதுவரை கைப்பற்றப்பட்ட
எல்லாம் காட்சிப்படுத்தப்பட இருக்கின்றன.

நீயும் நானும்
வெகு சுலபமாகப் புறக்கணிக்கப்பட்டு
போரால் அணுகிக்கொண்டிருக்கிற
வெளியில்
துடிதுடித்துக்கொண்டிருக்கிறது
கொண்டாட்டங்களுக்குரிய நமது வீடு.

உன்னையும் நமது சொற்களையும்
நாமிருந்து
பகிர்ந்துருக வேண்டிய வெளிகளையும்
ஒரு சாரைப்பாம்பு
மிக அமைதியாகத் தின்று முடிக்கிறது.
மேலும்
வருடத்தைத் தொடருகிறது
அலைச்சலுக்கான போரின் பிரகடனம்.

**14.04.2009**

## சவம் நிரம்பிய புத்தகப் பைகள்

*பள்ளிக்கூட மாணவர்கள்*
*வெள்ளைச் சீருடைகளை அணிந்து*
*நண்பர்களை நிரப்பிய சவப்பெட்டியுடன்*
*மயானங்களை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்*
*புத்தகங்களை சோதனைச் சாவடியில் விரித்தும்*
*முகாம்களில் ஒதுக்கியும்*
*சீருடைகளை முட்கம்பிச் சுருள்களில் உலரவிட்டும்.*

*பள்ளிக்கூடங்கள் இராணுவ முகாம்கள்*
*என்று அறிவிக்கப்பட்டன*
*இராணுவ சீருடைகளுக்குக் கீழேயும்*
*துப்பாக்கிகளில் அமர்ந்தும்*
*பரீட்சை எழுதும்படி அறிவிக்கப்பட்டது.*

*பள்ளிக்கூடங்கள் சிறைச்சாலையாகவும்*
*துப்பாக்கி கதவுகளைத் தாண்டி*
*வருபவர்களும் அஞ்சுபவர்களும்*
*புத்தகத்தின் நடுப்பக்கத்தைத் தாண்டாதவர்களும்*
*சீருடைகளால் கட்டித் தகர்க்கப்பட்டனர்.*

*முட்கம்பி ஓடைக்குள் நின்று*
*மாணவர்கள் அழுதார்கள்*
*ஆசிரியர்களும்*
*சவப்பெட்டியை நினைத்துத் திடுக்கிட்டார்கள்.*

*ஆசிரியர்களும் மாணவர்களுமாய்*
*துப்பாக்கிகளின் முன்*
*அணிவகுத்து நின்றார்கள்*
*இராணுவ சீருடையின் பின்னணியில்*
*விழுத்தப்பட்ட ஒளிப்படத்துடன்.*

*சவத்தை நிரப்பிய புத்தகப் பைகளுடன்*
*மயானங்கள் முதலிய பள்ளிக்கு*
*மாணவர்கள் தோள்களைச் சுமந்தார்கள்.*